எழுத்து

இலக்கிய
காலாண்டு ஏடு

அக்டோபர்
1969

ந. பிச்சமூர்த்தி
சங்கு ஸுப்ரஹ்மண்யன்
சி. சு. செல்லப்பா
சு. சங்கரசுப்ரமண்யன்
தி. சோ. வேணுகோபாலன்
ஹரி ஸ்ரீனிவாசன்
சு. குருசாமி
டி. ஆர். நடராஜன்
பா. ரவிகுமாரன்

கவிதை
சிறுகதை
கட்டுரை
நாடகம்

17

ரூ. 1-25

எழுத்து

இலக்கிய காலாண்டு ஏடு

ஆசிரியர் :

சி. சு. செல்லப்பா

அக்டோபர்-1969 **ஐப்பசி-சௌம்ய**

நியாயத்தின் கூறுகள்	2	தலையங்கம்
உங்கள் ஆதரவு	3	………………
தமிழ் நாவல்களின் அண்மைப் போக்கு	4	சு. சங்கரசுப்ரமண்யன்
சிக்கனம்	9	ந. பிச்சமூர்த்தி
ரோஜாவின் அவதாரம்	15	சங்கு ஸுப்ரஹ்மண்யன்
மண்ணில் தெரியுது வானம்	17	சி. சு. செல்லப்பா
ஞானம், உபதேசம்	21	ஹரி சீனிவாசன்
சாராயக் குளியல்	22	சு. குருசாமி
நிலவு	22	டி. ஆர். நடராஜன்
பயன், நாகரிகம்	22	தி. சோ. வேணுகோபாலன்
காலம்	22	பா. ரவிகுமாரன்
காந்தியுக நாவல்கள்	23	சு. ச.

எழுத்து—பதினோரும் ஆண்டு—அக்டோபர்—ஏடு 118.
காலாண்டு தோறும் ஜனவரி (தை), ஏப்ரல் (சித்திரை), ஜூலை (ஆடி), அக்டோபர் (ஐப்பசி) மாதங்களில் வெளிவரும்.
ஆபீஸ் : 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆண்டு சந்தா ரூ. 5-00; மூன்று ஆண்டுகள் ரூ. 15-00
வெளிநாடுகளுக்கு ரூ 10-00; ரூ 30-00

வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா 'கிளியரன்ஸ்' கட்டணம் சேர்த்து அனுப்ப வேண்டும்,
போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.
கதை, கட்டுரை, கவிதைகளுடன் போதிய ஸ்டாம்பு வைக்க வேண்டும்.
மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.

நியாயத்தின் கூறுகள்

நியாயம் என்பதும் நியாய உணர்வு என்பதும் எத்தனையோ பண்புகளைப்போல ஒரு தொடர்புச் சொல்லாகும். உலகத்துக்கும் மனித குலத்துக்கும் பொதுவான இந்த உயர்ந்த பண்பு, அழகுபோன்ற அழியும் தன்மை படைத்த பண்புகளைப் போலவே இடத்துக்கும் மனிதனுக்கும் ஏற்ப மாறுபடுவது விசித்திரமாகவே உள்ளது.

நியாயம் என்றவுடன் நினைவில் தொடர்பு கொள்பவை அறம், நீதி சத்யம், ஒழுக்கம் போன்ற நன்னெறிகள். இவைகளைப்பற்றித் தனியாகவோ மொத்தமாகவோ சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது என்று நினைப்பவர்கள் பிரமிக்கும் வண்ணம் சமீபத்தில் ஒரு சொற்பொழிவு கேட்க நேர்ந்தது. 'பவர்' அமைப்பின் சார்பில் நவம்பர் 23-ம் தேதி நடந்த கூட்டத்தில் சென்னை பல்கழக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் டாக்டர் ந. சுப்ரமண்யம் ''நியாய உணர்வு'' என்னும் தலைப்பில் நிகழ்த்திய உரை இலக்கிய நயமும் சிந்தனைச் செறிவும் கலந்ததாக அமைந்தது. அடிப்படைப் பண்புகளைப்பற்றிய பரந்த அறிவு இன்றைய சமுதாயத்துக்குத் தேவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளும் போது, இத்தகைய உரைகளின் தேவைக்கு எல்லையே இல்லை.

சம்பிரதாயத்தில் பிடிப்பும் பற்றும் இருக்கிற காரணத்தாலும், சமூகத்தில் நல்ல பிள்ளையாக விளங்க வேண்டும் என்கிற ஆசை காரணமாகவுமே மனிதன் தவறுகள் செய்ய பயப்படுகிறான். அதுவன்றி அடிப்படையில் அவன் தீயவனே என்னும் பேராசிரியரின் கருத்து நியாய உணர்வின் வரம்பை ஓரளவு சுட்டிக்காட்டுகிறது. தவறுவது மனிதசுபாவம், மன்னிப்பது கடவுள்தன்மை' என்று படித்திருக்கிறோம். தவறுகிற கூட்டத்தைத் தனியே பிரித்து மன்னிக்கிற வாய்ப்புப் பெறுகிறவன் ஒதுங்கும் போது அவனிடம் 'பெரிய மனிதத்தனம்' ஏறுகிறது. அந்த கௌரவம் கருதியே நியாயத்தைப் பற்றுகிற 'அவஸ்தை' தவிர்க்க முடியாததாகிறது.

குடியாட்சிக் காலத்தில் மட்டுமின்றி இன்றைய ஜனநாயக யுகத்தில்கூட 'வல்லமை' யின் ஆட்சி ஓங்குவதை பார்க்கிறோம். ஜனங்களின் சம்மதத்தோடு—அதாவது எதிர்ப்பு இல்லாத வரைக்கும்—'முடியாட்சி' நடத்துவதுதான் மக்களாட்சியின் மாண்போ என்றுகூட சில சமயம் எண்ணத் தோன்றுகிறது. எந்த முறையிலும் இறுதியாக அதிகாரத்தின் உச்சம் ஓர் இடத்தில குவிக்கப்படுவது தவிர்க்க இயலாததாகும். அப்போது அந்த உச்சபீடத்தின் சார்புகளைச் சுற்றியே நியாயமும் சுழல வேண்டியதாகிறது.

இங்கே தனிமனிதனுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள உறவு விவாதிக்கப்பட வேண்டியதாகிறது. பேராசிரியர் சொன்ன சிறு உதாரணம் சுவையானது பிரஜைகள் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டால் அரசு தண்டிக்க முற்படும் ஆனால் அதே அரசு பிரஜைகளை எல்லாம் மொத்தமாக இன்னொரு நாட்டுக் குடிகளுடன் மோதவிடுவது யுத்தம்' என்கிற பெயரில் அனுமதிக்கப்படுகிறது 'மக்கள் எவ்வழி மன்னன் அவ்வழி' என்பது மன்னர்கள் காலத்தில் கூட மதிக்கப்பட்டதாகவே தெரிகிறது. மாறுவேடம் பூண்டு மக்கள் குரலைக் கேட்டு அதனையே மகேசன் குரலாக மதித்து தன்னைத் திருத்திக்கொண்ட மன்னர்களைப்பற்றி ஏராளமாகப் படித்திருக்கிறோம் ஆனால் மக்கள் ஆட்சியில் மன்னர்கள் ஒழிய அவர்களோடு அந்த நியாய உணர்வும் அழிந்து விட்டது போலும். ஒண்ணே முக்கால் ரூபாய் அதிகமாகவும், வேண்டாத வகையிலும் பெற்ற அரசாங்க கடைநிலை ஊழியன் கடுமையாக தண்டிக்கப்பட, அதே மாதிரி ஆயிரங்களை பெறும் உயர்நிலை ஊழியன் சுலபமாகத்தப்பி விடுவது நியாயத்தின் கண்களில் எப்படிப்படுகிறதோ? சமூக அந்தஸ்தைப் பாதிக்கும் வகையில் பெயர்களைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் வரிபாக்கிப் பிரமுகர்கள் சந்திக்கு இழுபட, மூத்த அமைச்சர் ஒருவர் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து வரிகட்டாமல் இருப்பது 'மறதி' யாக மன்னிக்கப்படுவது நீதி தேவன் சன்னதியில் சிரிப்பைத்தான் வரவழைக்கும்.

அப்பால் சட்டத்தின் பங்கு வருகிறது. மனிதகுல வழக்கப்படி, சம்பிரதாயப்படி நியாயமாக இருப்பது சட்டப்படி அப்படியே இருக்கத் தேவையில்லை சட்டத்துக்கு சூழ்நிலையில் சாதகம் வேறு உண்டு. காந்தியடிகள் மரண வேதனைப்பட கன்றுக்குட்டியை சாகவைத்ததை நினைவுபடுத்திக் கொள்ளலாம் வள்ளுவர் கூட 'நன்மைபயக்கும்' பொய்யை அனுமதிக்கிறார். எல்லாவற்றுக்கும் மேல், சட்டத்தை விளக்கும் பணி வேறு குறுக்கிடுகிறது குறிப்பிட்ட நிலைமையை விளக்கும் வாதப்பிரதிவாதங்களின் தாக்கல் கணக்கில் சேரும். அதனால்தான் சட்டத்தை இருட்டறை என்றும் கழுதை என்றும் பலவாறாகக்கூறி வருகிறோம்

பேராசிரியரின் உதாரணம் ஒன்று இங்கே குறிப்பிடத்தக்கது மனச்சாட்சி படைத்த ஒரு ஆங்கில நீதிபதிக்கு அன்று நாட்டில் நடைபெற்ற இயக்கமும் காந்திஜியின் நடவடிக்கைகளும் ஏற்புடையதாக இருக்கலாம் ஆனால் அவருடை ஸ்தானத்தின் நியாயப்படி அவர் காந்திஜிமீது தீர்ப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

இந்த நியாய உணர்வு நம்முடைய பழம் பெரு இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பது காலங்காலமாக விவாதிக்கப்பட்டே வந்திருக்கின்றன. பேராசிரியரை வரவேற்றுப் பேசிய சி சு செல்லப்பா இத்தகைய இரண்டு விஷயங்

களைத் தொட்டனர்; ராமன் வாலியைக் கொன்ற விதம் குறித்தும், தருமன் சூதில் திரௌபதியைப் பணயம் வைத்த முறை குறித்தும் சுவையாக விவாதிக்கலாம். பாரதிகூட 'பாஞ்சாலி சபதம்'ல் தருமன் விவகாரத்தைச் சூடாகவே எழுப்புகிறான். ஷேக்ஸ்பியர் நூல்களில் 'நியாயம்' நீளமாகவே விளக்கப்படுவதைக் காண்கிறோம். 'ரத்தம் கொட்டாமல் ஒரு பவுண்டு சதைமட்டும்' என்கிற தீர்ப்பில் போர்ஷியா ஷைலக்கை மடக்கும்போது நியாயம் நல்லவர்களுக்காகச் சிரிப்பதைப் பார்க்கிறோம்

தமிழ்ப் புத்திலக்கியத்தில் நியாயத்தின் புதிய கூறுகள் ஒளி பெற்றிருப்பதைப் படித்து ரசிக்க முடிகிறது. ராமனுடைய இரட்டை நியாயத்தை ஏற்காத அகலிகை மீண்டும் கல்லாகிற அதிசயத்தை புதுமைப்பித்தன் கதை கூறுகிறது. நோயாளிக் கணவனுக்குக் கஞ்சி வார்க்கத் தன்னையே விற்கத்துணியும் மனைவியின் நடத்தையில் புதிய 'நியாயம்' ஒன்றை அதே ஆசிரியர் காட்டப்போய், அது இன்று கணவன் மலட்டுத்தனத்தை மறைத்து அவனுக்குக் குழந்தை பெற்றுத்தர தன்னையே இன்னொருவன் முன்னால் இட்டுச் செல்லும் மனைவியின் 'நியாயம்', நோயாளித் தாய்க்கு மருந்து வாங்கக் காசுபண்ண மனைவியையே இன்னொருவனிடம் தள்ளுகின்ற கணவனின் 'நியாயம்' என்பது வரைக்கும் தடுமாறுகிறதைப் பார்க்கிறோம்.

எப்படியோ, சமூக நியதிகள் மாறுபடும் போது நியாயமும் புதுக்கூறுகள் பெறலாம். ஆனால் அதன் அடிப்படை கூறுபடாமல் காப்பாற்றப்படுமானால் சரிதான். நீதியைப் பெண் உருவத்தில் நிறுத்தி கண்களையும் கட்டி வைத்திருக்கிறார்களாம். கோரி வருபவர்களைக் காணாத வரைக்கும் சார்புக்கு வாய்ப்பில்லை என்பதற்கே கண்களைமூடி வைத்திருக்கிறார்களே தவிர குருடாக்குவதற்காக அல்ல. எனவே நம்பிக்கை வீண் போகாது. தர்மத்தின் வாழ்வைச் சூது கவ்வினாலும் மறுபடியும் தர்மம் வெல்லும் என்பது பாரதி வாக்கு. ஆனால் தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்டதாகவே கருதத் தக்கது.

இப்படி நியாயத்தைப்பற்றி முடிவில்லாமல் சிந்திக்க முடியும். அந்த வகையில் தூண்டிவிட்ட பேராசிரியரின் பேச்சைப்போல் தொடர்ந்து ஏற்பாடு செய்வது 'பவர்' அமைப்பின் பணியை விரிவுபடுத்தி மெருகூட்டும்.

உங்கள் ஆதரவு

அன்புள்ள வாசகர்களே,

இந்த நூற்றாண்டின் ஐம்பதுக்களில் இறுதி ஆண்டில் பிறந்தது. அறுபதுக்களை முழுக்க தாண்டி, எழுபதுக்களின் ஆரம்ப ஆண்டுக்குள் நுழைய இருக்கும் எழுத்துக்கு வரும் ஆண்டு மரமாங்க ஆண்டு. அதாவது பனிரெண்டாவது வயது சென்ற ஐம்பது வருஷ காலத்தில் தமிழ் இலக்கியப் பத்திரிகை உலகில் ஒரு சின்ன பத்திரிகைக்கு கிடைத்திருக்கும் ஒரு தனித்த வாய்ப்பு ஒரு சாதனை என்று கூட சொல்லலாம். ஆனால் இந்த சாதனையைப் பெற எழுத்து அதிக விலை கொடுக்க வேண்டித்தான் இருந்திருக்கிறது. பொருளாதார ரீதியாக எழுத்து தன்னைப் பார்த்துக்கொள்ள முடியவில்லை இன்னும். என் கையை நிறைய கடித்திருக்கிறது. லக்ஷிய வேகத்தில் அதை நடத்திக்கொண்டு வந்திருக்கிறேன் பிடிவாதமாக. அந்த வேகம் இன்றும் எனக்குத் தணியவில்லை, குறையவில்லை. ஆனாலும் உங்கள் காதுக்கு சிலதைச் சொல்லியாக வேண்டும். எழுத்து பற்றி எங்கும் பேசப்படுகிறது. நான் சந்திக்கும் யார் யாரோ எழுத்துவை பார்த்ததாக, படித்ததாகச் சொல்கிறார்கள் ஆனால் அவர்கள் பெயர் என் சந்தா பட்டியலில் இல்லை

எழுத்தாளன் மறைந்த பிறகு அவனைப் பற்றிப் பேசுவதும் பாராட்டுவதும் நிதி அளிப்பதும் நினைவுச் சின்னம் அமைப்பதும் பாரதி மரபாகவே இன்றும் தொடர்கிறது. அதே போல மறைந்துவிட்ட இலக்கிய சாதனை பத்திரிகைகளைப் பற்றி புகழ்வதும் வியப்பதும் மணிக்கொடி மரபாகவே இன்றும் தொடர்கிறது

எழுத்தும் நானும் ஒன்று சேர்ந்து எழுபதில் தொடர் நடை போட இருக்கிறோம். எங்கள் குறிக்கோள் ஓரளவாவது நிறைவேற போதிய தெம்பு அத்யாவசியமானது. அந்த தெம்பு ஏற்படச் செய்ய வேண்டியவர்கள் வாசகர்கள். எனவே தமிழ் இலக்கிய வாசகர்களை வேண்டிக் கொள்கிறேன். நான் வேறு எதுவும் கேட்கவில்லை. ஒவ்வொருவரும் எழுத்துக்கு சந்தாதாரராக சேர வேண்டும் என்பதுதான் நான் கேட்பது. சந்தா ஆதரவிலேயே எழுத்தும் நானும் வளர முடியும்; வாழ முடியும். உங்கள் மூவாண்டு சந்தாவை (ரூ. 15-00) எதிர்பார்க்கிறேன். இந்தஏடு தாமதமாகிவிட்டது. சந்தாதாரர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த ஏடு பிப்ரவரி முதல் வாரத்தில் வெளிவரும். இந்த ஏடு கிடைத்ததும் ஆண்டுச்சந்தா தவணை தீர்ந்தவர்கள் தங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மூன்று வருட சந்தாவாக அவசியம் அனுப்பி வைக்கவும். அன்பளிப்பு புத்தகத் திட்டம் தங்களுக்கு ஏற்கெனவே தெரியும். ஒவ்வொருவரும் ஐந்து மூவாண்டு சந்தாதாரர்களை சேர்த்துத் தரவும்.

இன்னொரு புதிய அன்பளிப்பு திட்டம். அதாவது 1970 முதல் மூன்றாண்டு சந்தா கட்டுபவர்களுக்கு 1969ம் ஆண்டு எழுத்து ஏடுகள் முழுதும் அன்பளிப்பாக கிடைக்கும். தங்கள் இலக்கிய நண்பர்களிடம் தெரிவியுங்கள். அவர்கள் முகவரிகளை எனக்கு எழுதுங்கள். 1970ல் எழுத்து சிறப்பாக வர தங்களால் ஆன ஆதரவை தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

— சி சு செ.

தமிழ் நாவல்களின் அண்மை போக்கு

சு. சங்கரசுப்ரமண்யன்

"ஊராச்சிக் கோட்டையிலும் அதற்குச் சமீபத்திலிருந்த கிராமங்களிலும் உள்ள எல்லோரும் நினைத்திருந்த வண்ணம் அவ்விரு பெண் குழந்தைகளும் ''ஸர்வபுக்'' என்று பெயர் படைத்துள்ள எல்லாவற்றையும் புசிக்கும் தீயின் மாளவில்லை கருப்பண்ணனுக்கு அத்தி கோவிந்தசக் கொள்ளியானது நிச்சயமே ஆனால் எல்லாரையும் காத்தருளும் ஈசன், இவ்விரு குழந்தைகளுக்கும் ஓர் தாயாயிருந்து அவ்வாபத்தில் இவ்விரு சிறுகுழந்தைகளும் சிக்காமல் காத்தருளினார், தாயுமானவர் என்ற ஈசனார் எச்சமயத்தில் இக் குழந்தைகள் மீதிரங்கினார் என்றால், ராதை தன்னருகே ஓர் பிசாசைக் கண்டதாக முன்னமேயே சொன்னோமே, அது முதல்.''

வாசகர்களைக் கதையின் தொடர்ச்சியோடு மிகுந்த கவனத்துடன் இட்டுச் செல்லும் இந்த வரிகள் பண்டித எஸ். எம். நடேச சாஸ்திரி எழுதிய ''திக்கற்ற இரு குழந்தைகள்'' என்னும், தமிழின் ஆரம்ப கால நாவலின் காண்பவை. கதை சொல்லும் பாணிக்கு, பதச்சோறுக் கொள்ளத்தக்க வரிகள் இவை. இந்த நாவலின் ஆசிரியர் தன்னுடைய படைப்பைப் பற்றிக் கூறியுள்ள வரிகளையும் படித்துக்கொண்டால், தமிழ் நாவலின் ஆரம்பத்தை, அண்மைப் போக்குக்கு ஆதாரமான ஆணிவேர்ப் பக்குவத்தை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

''இக் கதையைக் கதை ரூபமாய் பல பெயர்களுக்கு நாம் சொல்லியும் அவர்களுடைய அவா அடங்கவில்லை அற்புத நாவல் உருவமாய் எழுதினால்தான் இதிலுள்ள ரசம் முற்றிலும் வெளியாகும் என்று நாம் ஆலோசித்து எழுதினோம். அவசரமாய்க் கதை சொல்லுவதில் பல அழகான கட்டங்களை நாம் விட்டுவிடலாம் எழுதுவதென்று ஏற்பட்டால் நாம் எல்லா விஷயங்களையும் சொல்லியே முடிக்க வேண்டுமல்லவா?''

இவ்வாறு 'எல்லா விஷயங்களையும் சொல்லியே முடிப்பதற்கான' சாதனையாக நாவல் என்கிற இலக்கிய வகை தமிழில் தோன்றி, வளர்ந்து, நிலை பெற்றிருக்கிற உண்மையை நடுநிலை ஆராய்ச்சி மாணவன் சுலபமாகப் புரிந்து கொள்வான். கதை சொல்லும் வேறு, எழுதுவது வேறு படிக்கும் நாடகம், நடிக்கும் நாடகம் என்று பாகுபாடு செய்து கொள்கிற மாதிரி. நாவலை எழுதும்போது, கையாளப் படுகிற உத்தி, எடுத்துக்கொண்ட உள்ளடக்கத்தோடு இணைந்து, தனக்கென்று தனி உருவத்தைச் சமைத்துக் கொள்கிறது இந்த அம்சங்களின் கணிப்பே; போக்கை நிர்ணயிக்கும் வழிமுறையாக அமைகிறது.

இந்த இடத்தில், தலைப்பின் போக்கையும் சற்று ஆராய்ந்து கொள்வது நல்லது. இன்றைய தமிழ் நாவல்களின் வரலாற்று ரீதியான வரிசைபற்றியோ சாதனை அடிப்படையில் தலைநிமிர்ந்து தங்கும் படைப்புக்களின் பட்டியல்பற்றியோ நேரடி அக்கறைக்கு இங்கு இடம் இல்லை. விமர்சனப் பயிற்சி பரவலாக்கப்பட்டு, அதே சமயத்தில் விமர்சனப் பார்வை முறையாக உருவாகாத காலகட்டத்தில், எந்தக் கட்டுரையிலும் எதையும் அல்லது எல்லாவற்றையும் எதிர்பார்ப்பது ஓரளவுக்கு மரபாகிப் போயிருக்கிறது எனவே, சிறு எச்சரிக்கைக் குறிப்பு தேவைப்படுகிறது. நாவலின் அம்சங்கள் எந்த வகையில் இன்று கையாளப்படுகின்றன என்று பார்ப்பதே நோக்கமாகும்போது, பார்வைகள் முன்னிடம் பெறுகின்றன.

அடுத்து தெளிவுபட வேண்டிய சொல் 'அண்மை' என்பது சங்க காலம், பக்திக் காலம் என்றெல்லாம் பழைய இலக்கியத்துக்கு கால கட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்க, புதுமை இலக்கியத்துக்கு அம் மாதிரி பாகுபாடு இன்னும் சுலபமாகிறது. மறுமலர்ச்சி யுகத்தின் குறியீடாகப் பாரதியைக் கொள்ளும்போது அவன் தொடர்பு கொண்ட காலம் சரித்திர முக்கியத்வம் வாய்ந்த பகுதியாக இருப்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாகும். பாரதி மறைந்ததும் அவன் பாடல்களின் அரசியல், இலக்கிய பாதிப்பு மேலோங்கி நின்ற அந்தச் சரித்திர பகுதி முடிந்து, நாடு விடுதலை பெற்றதும், வரலாற்று நாயகன் வந்த வேலையை முடித்துக் கொண்டதும் அடுத்த கட்டத்துக்கு அடி எடுத்துக் கொடுத்தன. அதற்குப் பிந்திய காலம், கிட்டத்தட்ட இருபது வருஷங்கள். அண்மைக் கணக்கில ஏறும்.

பாரதி காலம் புதுமை இலக்கியத்தின் தோற்றத்தைக் கண்டதும், காந்தி யுகம் பல்வேறு இந்திய மொழிகளிலும் இலக்கிய வேகத்தை ஊட்டியதும் பழகிப்போன உண்மைகள் காந்தியிடமிருந்தும், காந்தி யுகத்திலிருந்தும் தள்ளித்தள்ளி விலகி வந்துள்ள நாம், அண்மைக்காலத்தில் இலக்கியத் துறையில் என்ன செய்திருக்கிறோம் என்று பார்ப்பது வீண் வேலையாகாது. அந்தப் பின்னணியில் தமிழ் நாவலின் போக்கை மதிப்பீடு செய்வதுவே இந்தக் கட்டுரையின் வடிவம் நிர்ணயமாகும்.

இந்திய மொழிகளில், குறிப்பாகத் தமிழைக்

பொறுத்த மட்டில் விடுதலை இயக்கம் இலக்கியத் துறையில தன் பாதிப்பைச் செலுத்தி இருக்கிறதென்பது, சுலபமான உண்மையாகும் தேசிய எழுச்சியின் பொதுவான வேகம் இலக்கியப் படைப்புக்களுக்குப் பொதுவான தூண்டுதலை அளித்ததை வைத்து, அந்தப் பாதிப்பை வேறு வகையில் கணக்கிட்டு ஏமாறக் கூடாது: படைக்கும் ஆர்வத்தை வளர்த்து, சோதனை முயற்சிகளில் ஈடுபட வைத்து, கையாளும் விஷயத்தில் கனத்தையும் சொல்லும் முறையில் புதுமையையும் ஏற்றிய அளவுக்குத்தான் இந்தப் பாதிப்பு தவிர, படைப்பின் கருச்சரக்கு முழுக்க முழுக்க அரசியலாகவும், தேசியமாகவும் இயக்கப் பிரச்னைகளாகவும் இருக்க வேண்டியது அவசியம் இல்லை, சாத்தியமும் இல்லை இயக்கம் முடிந்து, காலகட்டம், மாறுதல்பெற்று, தேசப் போக்கு மறுநிர்மாண முனைப்பில் திரும்புகிற போதுதான், முன்கட்ட நடப்புக்களின் பிரதிபலிப்பு இலக்கியத்தில் ஏறமுடியும்

ஆனால், இந்த அம்சத்தில தமிழ் இலக்கியத் துறையில் ஒரு விசித்திரப் போக்கு நிலவி வந்திருப்பதைக் குறிப்பிடத் தோன்றுகிறது இயக்க காலத்தில் பிரச்னைகள் கையாளப்பட்ட அளவுக்குப் பிற்காலத்தில் அணுகப்படவில்லை என்பது ஒருபுறமும், முந்தைய கட்டத்தில் தோன்றிய உத்வேகமும் கனமும் பிற்காலப் படைப்புக்களில் காட்டப்படவில்லை என்பது மறுபுறமும் அருத்து நிற்கும் உண்மைகள். 'படைப்புக்கள்' என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் நாவல்களையும் மனதில் வைத்துத் தான். நாவல்களைத் தொட்டுப் பார்ப்பதற்கு முன்பாக பொதுவான இலக்கியச் சூழலைக் கணித்துக் கொள்வது, நாவல் துறை பற்றிய காரணகாரிய ஆராய்ச்சி சிரமத்தைக் குறைத்து விடும்.

''நம்நாட்டுக்குச் சுதந்திரம் வந்தவுடன் வயிற்றிலே பசி கிள்ளும்போது இலக்கியம், கலை, தத்துவம் எதுவும் மனதில் பதியாது என்ற ஒரு புதிய சூத்திரததைத் தயார் செய்து கொண்டு மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தான் முதல லட்சியம் என்று நம்முடைய தலைவர்கள் செயல்படத் தொடங்கினார்கள். சமூகத்தில் இந்த வாழ்க்கை மனப்போக்கு எழுத்தாளனையும் பாதுக்காமல் விடவில்லை. புதிய செல்வ வளர்ச்சியின் விளைவாக எழுத்தறிவு வளர்ந்ததே அன்றி, எண்ண அறிவு வளரவில்லை அந்த வகையில் நம்முடைய தலைவர்கள் தவறி விட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தப புதிய எழுத்தறிவுக்காரர்களுக்கு பொழுது போக்குக்காக இலக்கியம் படைப்பது ஒரு பெரிய வ்யாபாரம் ஆகி விட்டது. அந்த வியாபாரம் சுழலில்சிக்கிக் கொண்டு எழுத்தாளன் திணறித் திணறி ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான். பி எஸ் ராமையாவின் இந்த வரிகள் நாம் கணிக்க முற்படுகிற அண்மைக காலததின் பொதுவான எழுத்துப் போக்கைத் தெளிவாக விண்டு காட்டுகின்றன.

அவருடைய கூற்றிலே ஒரு வரியை மட்டும் தொட்டுப் பார்க்க ஆசைப்படுகிறேன். 'அந்த வகையில் நம்முடைய தலைவர்கள் தவறி விட்டார்கள்' என்று சொல்வதோடு. 'நம்முடைய எழுத்தாளர்கள் தவறி விட்டார்கள்' என்பதையும் சேர்த்துக் கொள்ளத் தோன்றுகிறது. முதலிலே தலைவர்கள் தவறி இருந்தாலும் தொடர்ந்து எழுத்தாளர்களும் தவறி இருக்கலாமா. தலைவர்களையும் சேர்த்துத் தடம் திருப்பி இருக்கலாமே ஆனால் இப்போது, தவறியது யார் என்பதல்ல கேள்வி. எழுத்து தடுமாறி விட்டது என்கிற உண்மையை ஒப்புக் கொண்டால் சரிதான். மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற லட்சியத்தையாவது தலைவர்கள் மேற்கொள்ள' மக்கள் ரசனைத் தரத்தை உயர்த்துகிற லட்சியத்தை எழுத்தாளர்கள் மேற்கொள்ளவில்லையே என்கிற அடுத்த கேள்வியும் உடனடி நியாயத்தின் அடிப்படையில் எழக் கூடியதே.

சற்று விரிவாகவே புலப்படுத்தியிருக்கிற இந்த இலக்கியப் போக்கு நாவல்களில் தனி ஆதிக்கத்தைபெறும் அளவு நிலைநாட்டத் தவறவில்லை. கதை சொல்லும் முறையில் மரபு வழியை விடாது பற்றிக் கொண்ட எழுத்தாளர்கள கதைககான விஷயத்தில் மரபைமீறிய மதிப்புக்களைச் சுமத்தத் துணிந்த விசித்திரம் தமிழ் நாவல்களில் பரதிபலிக்கக் காண்கிறோம். சமூகத்திலேயே அந்த மதிப்பு மாற்றம் பிரமைத் தடத்தில் திசை திருப்பி இருப்பதைப் பார்க்கும் போது, ஒரு கோணத்தில் அந்த நாவல்கள் செம்மையாகவே வாழ்க்கையைத் தொட்டு விட்டனவோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. என்றாலும், கதையின் முடிவில், எழுப்பப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்ப்பு வழங்கும்போது மரபை மீறும் துணிவு அவ்வளவாக இருப்பதில்லை. நல்லது வெல்லும்; நல்லவன் வாழ்வான்' என்கிற சூத்திரம்தான்.

சமூகச் சுழற்சியின் பிரச்னைகளின் கனம் அழுங்கிக்கிடக்க, ரசமையா குறிப்பிட்ட புதிய செல்வச் செழிப்பில், பிரச்னைகளிலிருந்து மனிதர்கள் தங்களை அப்புறப்படுத்திக்கொள்ள, 'அகத்துறை உணர்வு 'ஒன்றே மிஞ்சிப் போகிறது, காதல் என்பதற்கு அதனுடைய பொருளும் சரியாத விளங்காத நிலையில், 'மரியாதையான' சொற்றொடரையே பயன்படுத்தத் துணிகிறேன். அந்த உணர்வை எந்த அளவுக்குச் செலாவணியாக்க முடியுமோ, அந்த அளவுக்கு நாவல்கள் பிறந்திருக்கின்றன. காதல் போயின சாதல்' என்று பாரதி சொன்னதுபோக, காதலை வைத்தே இலக்கியத்தைச் சாகடித்துக் காட்டியுள்ள பெருமைக்குப் பல நாவலாசிரியர்கள் உரிமை கொண்டாடக் கூடும்.

இந்தச் சூழ்நிலையில், அகத்துறை உணர்வை

இவைத்துப் பின்னிப்பட்ட படைப்புகளில் 'மோகமுள்' என்னும் நாவல் வெளிவந்தது. உருவம், உள்ளடக்கம், உத்தி முதலிய அம்சங்களில் மாறுபாடு காட்டி ஒரு கால கட்டம் குறியீடாகப் பிறந்துள்ள அந்த நாவல் 'அண்மைப் போக்கு' பற்றிய ஆராய்ச்சிக்குப் பல விஷயங்களை வழங்கும்.

சிறுகதைத் துறையில் அகத்துறை உணர்வை வெளியிடுவதில் இலக்கிய ரீதியாக கு. ப. ராஜகோபாலன் கதைகள் வெற்றி பெற்றதைப்போல, நாவல் துறையில் இந்த நாவல் வெற்றிகரமான முயற்சி என்று சொல்லலாம். அதனாலதான், கு. ப. ரா. கதைகளைப் பின்பற்றி, வழுக்கின முயற்சிகள் சிறுகதைத் துறையில் பிறந்து கொண்டிருப்பதைப் போல, நாவல் துறையிலும் 'அபாயகரமான' பின்பற்றல்கள் நிகழ்ந்துள்ளன போலும்.

உளப்பாங்கு ரீதியாக எந்த உணர்வும் சித்தரிக்கப்படுவதை இலக்கிய பூர்வமாக அனுமதிக்க முடியும். இந்த உணர்வு தனிமனிதனுடையதானாலும் அல்லது சமூகத்தினுடையதானாலும் சரி இலக்கியத்தில் கையாளப்படுகிறதாலேயே சில நியதிகள் சமூக அங்கீகாரம் பெற்றுவிட முடியாது. சமூகத்தின் கோணல்களையும் மனிதமன வக்ரங்களையும் நாவல்களில் சித்தரிக்கிறசாக்கில், புதிய நியாயங்களை சமூகத் மீது திணிக்கிற சாமர்த்தியம் சம்பிரதாய அளவில்கூட பலிக்காது. அந்தப் பயனைப்பற்றி நாவலாசிரியனுக்கு அக்கறை' தேவையில்லையே என்ற வேகமான மறுதளிப்பு கிளம்பும். சமூகத்தின் மனப்போக்கைக் கிரகித்துத் தன்னுடைய படைப்பில் உருவம் சமைக்கிறவன், சமூகத்தின் ஏற்புக்குக் கட்டுப்படத் தயாராயில்லை என்றால், சமூகத்தை மட்டுமின்றி தன்னையும்தான் ஏமாற்றிக்கொள்கிறான். ''நாயக—நாயகி பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின்மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம்'' என்று பாரதியின் 'கண்ணப்பாட்டு' முன்னுரையில் வ. வெ. சு. ஐயர் கூறியிருப்பதை மட்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இத்தனையும் சொல்லக் காரணம், உளவியலுக்குப் பொருந்தாத, சமூக நியதிகளும் ஏற்காத அம்சங்களை உள்ளடக்கிய நாவல்கள் அண்மைக் காலத்தில் வெளிவரத் தொடங்கி இருப்பதுதான். 'அம்மா வந்தாள்,' 'வாசவேஸ்வரம்,' 'ரிஷிமூலம்,' 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்று ஒரு போக்கு தொடர்கதையாக விரிந்து கொண்டிருப்பதை வாசகர்கள் கவனித்திருக்கக் கூடும். இனி இந்த போக்குதான் இலக்கியப் போக்கோ என்று வாசகர் கூட்டம் மயங்குகிற அல்லது தடுமாறுகிற அளவுக்கு ஒரு நிலை உருவாகி வருகிறது. இவைகளின் இலக்கிய அந்தஸ்தை எடை போடுவது தனிக்காரியம். முன்னவை இரண்டும் தனி வெளியீடுகள் என்பதையும் பின்னவை இரண்டும் பத்திரிகைப் பிரசுரங்கள் என்பதையும் கவனித்தால், தமிழ் நாவலின் இந்தப் போக்கு இரு வகையிலும் இணைந்திருப்பதை உணரலாம்.

தமிழ் நாவல்களைப் பொறுத்த மட்டில் பத்திரிகைத் தொடர்கதைகளைவிட தனி வெளியீடுகளுக்கு ஒரு விசேஷ கௌரவமும் இலக்கிய அங்கீகாரமும் கிடைத்துவருகிற நேரம் இது. அதற்கான காரணங்களைத் தனியே ஆராயலாம் என்றாலும், அதனால் தமிழ் நாவலின் போக்கு, தவிர்க்க வேண்டிய சில பிரமைகளுக்கு இலக்காகும் விபத்து தொடங்கி நிற்பதைப் பார்த்துக் கொள்வது நல்லது.

நாவல்களின் பெயர்களைச் சொல்லி இன்று மேலோங்கி நிற்கிற ஒரு போக்கைச் சுட்டிக் காட்டும்போது நாவல்களில் கையாளப்பட வேண்டிய விஷயங்கள் குறித்த விவாதத்தில் இறங்க வேண்டியதில்லை. இலக்கியத்திற்கு அம்மாதிரி 'வேண்டிய' விஷயங்கள் என்று தனியாக எதுவும் இல்லை. 'பொழுதுபோக்கு இலக்கியம்' என்று தூர இருந்தே இனம் கண்டு ஒதுக்குவது இலக்கியத்துக்கு லாபத்தையே தரும். அதுவன்றி, கனமான இலக்கியம்' என்னும் வகையில் சேர்ந்து கொண்டு, இனம் காண முடியாமல்போனால் பொய்மை இலக்கியம் அசாதாரணமான அப்பட்டமான போலி இரண்டிற்கும் இடைப்பட பொய்மைக்கு அன்றாட வாழ்வில் செல்வாக்கு இருப்பது போலவே. அந்த வகை நாவல்களுக்கும் 'மவுசு' இருக்கிறது போலும்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட காந்தியுக வரலாறு, காந்தியக் கொள்கைகள், தேசிய எழுச்சிக் கால பிரச்னைகள் இவைகளை வெளிப்படுத்தும் நாவல்களின் தமிழில் ஒருமுனைப்பாக வெளிவருவதற்கு காந்தி நூற்றாண்டு வருடம் வரை காத்திருக்கவேண்டி இருந்திருக்கிறது. விடுதலை பெற்று சுமார் இருபது வருஷங்கள் கழித்து அந்த முனையில் ஒரு முயற்சி தோன்றியது 'இருபது வருஷங்கள்' என்னும் நாவல் வகையில் பிள்ளையார்சுழி போட்டு வைத்ததாகக் கொள்ளலாம்.

ஒரு 'போக்கு' என்று குறிப்பிடும்போது சில விஷயங்களை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அகத்துறை உணர்வை முந்த விட்டு, தனிப் பார்வை ஒன்றை இரண்டாம் பட்சமாக்கி திருப்திப்படுவதில அர்த்தம் இல்லை. அதே போன்று, பிரச்னைக் கண்ணோட்டத்தையும் வாழ்வு முறை விளக்கத்தையும்—இரண்டும் ஆசிரியர் பார்வையில்தான்—வழக்கமான முக்கோணக் காதல் கதையம்சத்தில் அமிழ்த்திவிட்டு, கண்ணோட்டத்துக்காகவும் விளக்கத்துக்காகவும் பாராட்டை எதிர்பார்ப்பதும் நியாயமாகாது.

தேசியப் பிரச்னைகள் என்றும் காந்தியுகம் என்றும் குறிப்பிடும்போது நேற்றைய நமது சொந்த சரித்திரம் கண் முன்னே விரிகிறது. சரித்திரத்தையும் நாவலையும் சம்பந்தப்படுத்தியவுடனேயே தோள்வலிமிக்க நாயகனும், கயல்

விழி படைத்த நாயகியும், சுயநலத் தளபதியும், சூழ்ச்சிக்கார ராஜகுருவும் வரிசையாக வந்து நிற்பது நமக்குப் பழகிப்போன ஒன்று. விடுதலைப் போரின் அம்சங்கள் முற்றிலும் மாறுபட்டவை. நெஞ்சுறுதியோடு நேர்மை நெறிகளும் இணைந்த நாயகனின் நடவடிக்கைகள் ஒரு நாவலின் பிரமிப்பூட்டும் தன்மைக்கு ஈடு கொடுக்கக் கூடியவை. நீண்ட நிலப்பரப்பில் ஊருக்கு ஊர் நடந்த சம்பவங்கள் பல சுவையான கதைகளை அமைத்துக் கொடுப்பனவாகும். அன்று மேலோங்கி நின்ற தனிமனித ஒழுக்கமும் சமூக வாய்மையும் அமரத்வம் வாய்ந்த, பாத்திரங்களைப் படைப்பதற்குச் சுலபமாகக் கைகொடுக்கக் கூடியவை எது நிஜம், எது கற்பனை என்று சிரமப்படும்படியான இணைந்த போக்கில் கூடிய உணர்ச்சி வார்ப்புக்கள் இலக்கியப் பூச்சுக்காகக் காத்துக் கிடக்கின்றன.

இவைகளை எல்லாம் மனிதிற்கொண்டு புதுமை இலக்கியம் படைக்கும் ஆற்றல் தமிழ் நாவல் துறையில் வற்றி விடவில்லை என்பதற்குச் சாட்சியாக, 'ஆத்மாவின் ராகங்கள்,' 'மண்ணில் தெரியுது வானம்,' 'வலைக்கரம்' போன்ற படைப்புக்கள் நடப்பு ஆண்டில் தொடர்ச்சியாக வெளிவந்திருப்பதை புதிய போக்கின் அறிகுறியாகக் கொள்ளலாம். தேசிய வாழ்வின் ஆதர்ச உருவங்கள் கதாநாயகன், கதாநாயகி இருவரையும் வைத்து ஒரு நாவல் உருவாக முடியாமல், தேசிய வாழ்வின் அபிமான உணர்ச்சிகளையும், அபிலாஷைகளையும் முன்வைத்தும் ஒரு நாவலை உருவாக்க முடியும் என்பதைக் கணித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. போராட்டத்திற்கான களத்தை மையமாக வைத்து அதைச் சுற்றி கதையை உருவாக்க முடியும் என்பதையும் பார்க்கிறோம்.

இந்தப் போக்கு பரந்து விரிவதற்குச் சாதனங்கள் நிறைய உண்டு. வாழ்வின் சாசுவதமான நெறிகளோடு, சமூகத்துக்குப் பொருந்தக்கூடிய நீதிகளையும் பிணைத்து ஒரு நடைமுறைத் தத்துவத்தைக் காந்தி யுகம் காட்டியிருக்கிறது. அந்தத் தத்துவ தரிசன விளக்கத்தைச் சுவையான கற்பனையில் குழைத்து இலக்கிய பூர்வமான நாவலாக உருவாக்க முடியுமானால் அந்தச் சாதனையின் தரம் தனித்து நிற்கும் என்பதற்கு உத்திரவாதம் தேவையில்லை.

'தத்துவம்' என்ற சொல் விழுந்ததற்காக, புதிய பிரமைகள் பிறக்க வேண்டாம். அடிப்படை எச்சரிக்கையுடனேயே அது பயன்படுத்தப்படுகிறது. சராசரி இந்தியனுக்குத் தத்துவ விசாரம் தானாக வாய்க்கிறது அல்லது எதற்கும் தத்துவ முலாம் பூசிவிடும் சாமர்த்தியம் அவனுக்கு நிறைய உண்டு என்று கொள்வதானாலும் பிசகில்லை எந்தத் தத்துவம் உயர்ந்தது என்றோ, எது இலக்கியத்துக்கு ஏற்றது என்றோ விவாதிப்பதும் முடிவு கட்ட முயல்வதும் இங்கு வேலையல்ல. அண்மைக்காலப் போக்கில் எது தலை தூக்கி இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடருமா என்பதும் இனி ஓடும் பேனாக்களைப் பொறுத்த சங்கதி.

இதுவரை சுட்டிக்காட்டிய ஒரு தெளிவான போக்குகளுக்கிடையே தமிழ் நாவல் முயற்சிகள் வேறுவகையிலும் வெளிவந்திருக்கின்றன. இலக்கிய அந்தஸ்தை எட்டுகின்ற அவை பற்றிய பிரஸ்தாபம் இல்லாவிட்டால் முழு நியாயம் செய்ததாகாது.

குடும்பச் சூழ்நிலையில் தோன்றும் தனி மனிதப் போக்கை முன்வைத்து எழுதப்பட்ட சித்திரங்கள் நம் கவனத்திலிருந்து தப்பக் கூடாது. முதலில் குறிப்பிட்ட அகத்துறை உணர்வு அறவே நீங்கி அல்லது பின்தள்ளப்பட்டு, சமூகபாதிப்பை மிஞ்சி தனிமனித சுபாவம் தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் படைத்தது என்பதை வெளிக்காட்டும் நாவல்கள் இவை. 'ஜீவனாம்சம்', 'அறுவடை', 'புத்தம் வீடு', 'தலைமுறைகள்' போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலக்கியத்தில் இந்தப்போக்குக்கு என்றுமே 'ஆர்ப்பாட்டம்' இல்லாத இடம் உண்டு. கவர்ச்சிகரமான அம்சங்கள், சுவையான திருப்பங்கள் போன்ற, 'தவிர்க்கப்பட முடியாத' என்று நம்பப்படுகிற பண்புகளை இயற்கையான முறையில் தவிர்த்துச் செய்யப்படும் சோதனைகள் இவை. 'குடும்பப் பாங்கான' என்கிற சொற்றொடரை இந்த நாவல்களுக்குப் பொதுவாகப் பயன்படுத்தலாமா என்று யோசிக்கும்போதே பயமாய் இருக்கிறது. காரணம், இன்றைய வழக்கில் பல சொற்றொடர்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதும், புரிந்துகொள்ளப்படுவதும் சகஜமாகிவிட்டது. 'குடும்பப் பத்திரிகை', 'குடும்பக் கதை', 'குடும்பத்தினர் கண்டுகளிக்கும் படம்' என்றெல்லாம் விளம்பர வாசகங்கள் நம்மைச் சுற்றி பயமுறுத்தும்போது, நாமே குடும்பச் சூழ்நிலையை விட்டு அப்புறப்படுத்தப்படுகிறோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. பெண்ணின், அதுவும் அபலையின் அவல வாழ்வைச் சித்தரிப்பதாக பல நாவல்களின் முன்னுரைகளிலோ, ஏன் மதிப்புரைகளிலோகூட படிக்க நேரிடுகிறது. சற்று திருத்திக் கொண்டால், வாழ்வை அவலமாகச் சித்தரித்த கோரத்தையே அவற்றில் காணலாம்.

போக்குகளை நிர்ணயிக்கும் முறையில் இதுவரை வகைபடுத்திய வரிசைகளுக்கு அப்பால வேறு சில குறிப்பிடத்தக்க நாவல்களும் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து அதே முனைப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் அவை தனித்தே நிற்கின்றன. 'வாடிவாசல்', 'ஒரு புளியமரத்தின் கதை', 'மலரும் சருகும்' போன்ற படைப்புக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

மனித-மிருக மோதலை ஒரு கலையாகவும் வாழ்வாகவும் பயிலும் தென் மாவட்டப் பண்

யைச் சித்தரிப்பதும்; அரசியல் சுழற்சியில் ஒரு கிராமமே பாதிக்கப்படும் நிலைமையைச் சித்தரிப்பதும். சமூக ஏற்றத் தாழ்வில் பிறக்கும் மோதலைச் சித்தரிப்பதும் நிச்சயமாக நாவல் களத்தின் வீச்சை விரிவுபடுத்துகின்றன

பொதுவாக நாவல் துறையில் விரிவாகப் பேசப்படும் இரண்டு பிரிவுகள் உண்டு. சரித்திர நாவல்களும், பிராந்திய நாவல்களும் எந்த அளவுக்குத் தமிழில் பெயர் சொல்லக்கூடிய வகையில் உருவாகி வந்திருக்கின்றன என்பது சுவையான ஆராய்ச்சியாகும் ஆங்காங்கு அடிக்குறிப்பு போட்டு, சரித்திர நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுவதாலோ, சரித்திரம் சமைத்துத் தந்த களங்களைக் கதைகளில் நுழைப்பதாலோ சரித்திர நாவல்கள் உருவாகி விடுவதில்லை. பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள் இவர்களின் தேச விசுவாசத்திலிருந்து, நேற்று நடந்த சீன, பாகிஸ்தான் படையெடுப்புக்களின் விளைவாக தேசம் முழுவதும் ஊறிய துடிப்புணர்ச்சி வரை எத்தனையோ பண்புகளை இழையோடவிட்டு அசல் சரித்திர நாவல்கள் இனித்தான் தோன்ற வேண்டும், அதேபோல, பிராந்திய நாவல்கள் பற்றி எண்ணும்போது மண்வாடை, பிரதேச வழக்கு, தனிப்பட்ட நடைமுறைகள் போன்ற அம்சங்கள் இணைய வேண்டிய அவசியம் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், பேச்சு நடை ஒன்றின் பலத்திலேயே, மற்ற வழக்கமான அங்கங்களை எழுப்பி, படைப்புக்கள் இருப்பதாகச் சொல்ல வேண்டும். தீர்மானமான போக்குகளைக் கணித்திடும்போது இந்தவகை நாவல்கள் இடம்பெற இயலாமைக்கு இதுவே காரணமாகும்.

மனிதனின் பலவீனங்களை மிகைப்படுத்தும் முயற்சிகள் தரமான இலக்கியப் போக்குக்குக் குந்தகம் விளைவிப்பதைத் தனியாகச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. வாசகனின் பலவீனத்தை நம்பியே பெரும்பாலும் இலக்கியம் பண்ண வேண்டிய அவஸ்தையை அல்லது இலக்கியம் பண்ணும் சாமர்த்தியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் போக்கு சமூகத்தின் கலையுணர்வில் பிறந்த கோளாறைத் தழுவியதாகும். கதம்பமான அம்சங்களை இட்டு நிரப்பி 'வெற்றிகரமாக' பத்திரிகை நடத்துவது, அமர்ந்திருக்கிற இரண்டரை மணி நேரத்துக்கு தம்மை மறந்து சிரித்துத் தள்ளும் ரசிகரை மனசில் கொண்டு நாடகம்போடுவது. கதையம்சத்தைத் தெரிந்தே ஒதுக்கி வைத்து, தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்தி 'பிரம்மாண்டமான' திரைப் படங்களைத் தயாரிப்பது என்பது போன்ற நிலைத்துவிட்ட நியதிகளுக்கு ஏற்ப இலக்கியத் துறையும் வளைந்தும் சரிந்தும் காட்சி அளிப்பது, 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' நியதியை மதிப்பதாகக் கொள்ள வேண்டியதுதான்.

உளவியல் ரீதியாக ஆழ்ந்து பார்த்து மனித சுபாவங்களை வெளிக்கொணரும்போது நாவலுக்குக் புதிய உருவம் கிடைப்பதோடு, புது உத்திகளைக் கையாள வேண்டிய தேவையும் பிறக்கிறது. ஆரம்பத்திலேயே குறிப்பிட்டபடி, உருவம், உத்தி, உள்ளடக்கம் மூன்றுமே பிரிக்க முடியாத அம்சங்கள். உணர்ச்சி பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் மனித உறவுகள், சமூக நிலைகள் பற்றிய புதிய சித்தரிப்புகள் தயாராகும் போது நாவலுக்குப் புதிய போக்குகள் கிடைக்கின்றன. சட்டத்தின் தேவை இன்றியே, பெண்களின் திருமண வயது தள்ளிப் போயிருக்கிற சகஜ நிலையும், பெண்ணுக்குச் சொத்துரிமை, விவாகரத்துக்கு வாய்ப்பு, கருச்சிதைவுக்கு அங்கீகாரம் போன்ற சட்டபூர்வமான சலுகைகளும் இன்றைய பாரதப் பெண்ணை, தமிழ்ப் பெண்ணை எப்படி மாற்றி இருக்கின்றன என்பதை நாவல்கள் நயம்பட சித்தரிக்க முடியுமானால் 'சுந்தரி', 'விஜயம்' போன்ற பழைய படைப்புக்களின் புதிய 'பதிப்புக்கள்' உருவாகக் கூடும்.

அஹிம்சை, சத்தியம் போன்ற நெறிகள் ஒரு புறம் இருக்க, தீண்டாமை ஒழிப்பு மது விலக்கு, சுயதேவைப் பூர்த்தி, கிராமப் பெருவாழ்வு போன்ற நடைமுறைத் திட்டங்களை வைத்து தமிழில் சிறுகதைகள் வந்த அளவுக்குக் கூட நாவல்கள் உருவாகவில்லை என்றே சொல்ல வேண்டும் இவைகளில் சில ஓய்ந்துபோன பிரச்னைகள் என்று ஒதுக்கி வைப்பது முற்றிலும் சரியல்ல என்பது அண்மைக் காலத்து நிகழ்ச்சிகள் மூலம் தெரிய வருகிறது 'சேரிஒழிப்பு' என்பது அரசியல் வாபத்திற்கு முரணானது அல்லது ஒவ்வாதது என்பதானது ஜனநாயகம் மூலம் உருவான விநோத நிலைகளில் ஒன்று. அதேபோல மதுவிலக்கு கேள்விக் குறியாக உருவெடுப்பதும் பல இடங்களில் வெடித்துப் போனதும் எதைக் காட்டுகிறது? சரித்திரம் தம்மைப் பொறுத்த மட்டில் சீக்கிரமே திரும்பி விடும் போலும். இந்த நடைமுறைக் கோளாறுகளையும் சமுதாயச் சிக்கல்களையும் தனியே கையாளும் நாவல்கள் தோன்ற வேண்டாமா?

இதேபோல, தனி மனிதனின் வாழ்வில் அரசாங்க முத்திரை பதிந்திருப்பதன் பலன்களும் முழுமையாக நாவல்களில் வெளிக்கொணரப்பட வேண்டும் உடைமைகளில் பாதிப்பு, தொழில்களில் நெருக்கடி, விவசாயத்தில் கெடுபிடி, பரஸ்பர உறவுகளில் போலித் தன்மை போன்ற பிரத்யட்ச நிலைகள் இலக்கியத்துக்குப் புறம்பான சரக்குகள் அல்ல. நாவலுக்கு விஷயங்கள் இவைதான் என்று வரையறுத்துக்கொண்ட போக்கு பொதுவாகவே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், சமீப காலத்தில் வரையறை தளர்ந்து, புதிய விஷயங்களைத் தொடவும், புதிய சிந்தனைகளைத் தூவவும் ஒரு ஆரம்பச் சூழ்நிலை உருவாகி இருப்பதை நம்பிக்கையோடு உணர முடிகிறது இந்தப் போக்கில் புதிய வரையறைகள் ஊடுருவி, தடத்தைப் பாழ்படுத்தாத வரைக்கும் அந்த நம்பிக்கைக்கு ஊறு இல்லை.

சிக்கனம்

ந. பிச்சமூர்த்தி

காட்சி-1

[பிற்பகல் சுமார் 2-30 மணி இருக்கலாம். கடைத் தெருவில் ஒரு மளிகைக் கடை வாயில் புறத்தில் வெயிலை மறைக்க சாக்கு படுதா விடப்பட்டிருக்கிறது. முதலாளி பெட்டியடி காலி; அடுத்தாற் போல மேல் வேஷ்டியைச் சுருட்டி தலைக்கு வைத்துக்கொண்டு கணக்குப் பிள்ளை தூங்குகிறான். கடைக்குள்ளே சர்க்கரை மூட்டையின் மீது சோமு முதலி உட்கார்ந்திருக்கிறான். முப்பத்தைந்து வயதிருக்கும். கிழவன் கருப்பையன் அறுபது வயது கீழே உட்கார்ந்திருக்கிறான் அவனுக்குப் பக்கத்தில் கண்ணுச்சாமி. மீனாட்சிசுந்தரம் முதலாளியின் தமக்கை மகள்-ஒரு கல்லாப் பெட்டி மீது சாய்ந்து கொண்டு தூங்கி வழிகிறான். இவர்களுடைய தோற்றத்தைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை என்றைக்கும் எந்த மளிகைக் கடையிலும் இவர்களைப் போன்றவர்களைப் பார்க்கலாம்.]

கருப்பையன்: *(கைகளைச் சேர்த்து முறுக்கி கொட்டாவி விட்டுக்கொண்டு)* நல்ல வெயில், நல்ல வெயில். நல்ல சோம்பல்! நல்ல சோம்பல்!

கண்ணுசாமி: அதெல்லாம் இல்லே தாத்தா! கடையிலே கூட்டம் இருந்து வேலை இருந்தாச் சின்ன கொட்டாவி வராது இல்லாட்டி இப்படித்தான். *(கொட்டாவி விடுகிறான்)*

சோமு முதலி: நெசந்தான். காலை வேளை சாயங்கால வேளையிலேகூட கடையிலே வியாபாரத்தைக் காணோம் ஈ மொய்க்கிது. ஏன் இப்படி வியாபாரம் துடுதிப்புன்னு விழுந்து போச்சு இன்னு தெரியல்லே *(கொட்டாவி விடுகிறான்)*

கருப்: ஏன் தெரியல்லே. ஒலகத்திலே பணமே தாணுமெ போயிருச்சாம்.

கண்ணு: முதலாளி நேத்து சொல்லிக்கிட்டிருந்தாரு; கடை இடம் மாத்தினவாசியோன்னுட்டு

கருப்: இருக்கும் இப்படித்தான் இவுங்க அப்பா நாளையிலே—

சோமு: நீ எதாவது ஆரம்பிக்காதே நீளமா — இப்போதான் ஞாபகம் வருது. வியாபாரம் இருக்கிற இந்த லச்சணத்திலேதான் கண்ணுசாமி சம்பளத்தை நூறு ரூபாய்க்கு உசத்தணும்னு முதலாளிகிட்டே சிபார்சு செய்யச் சொல்று கண்ணுசாமி ஆயா.

கருப்: நியாயந்தானே! இப்படித்தான் மூணு ரூபாயிலே அப்போ நான் உக்காந்திண்டு இருந்தேன், ஒரு தரம்.

சோமு: ஆமாம், கிழவனார் ஜவேஜியிலே இருந்து சம்பளம் கழட்டப் போறா!...சக்கிரத்திலே சோறு கிடையாதுன்னு எலை பொத்தல் என்கிறாப்போலே இருக்குது! கண்ணுச்சாமி வேலை நிலைக்கிறதே சந்தேகம்!

கண்ணு: எனக்கு அப்பவே தெரியும்.

கருப்: என்ன விசயம்?

சோமு: நான் சொல்றேன் கேளு...மீனாட்சி சுந்தரத்தின் ஆயா இருக்காளில்லே...

கருப்: முதலாளி அக்கா?

சோமு: ஆமா. அவ இங்கே போன மாசம் வந்தா பாரு.

கருப்: முதலாளி பிரசவத்துக்கு?

சோமு: *(இடி இடியென்று சிரித்துக் கொண்டு)* முதலாளி பிரசவமா?

கருப்: ஆமாண்டா தம்பி, முதலாளி சம்சாரம் பிள்ளை பெறல்லே! நான்கூட பிராந்தி புட்டி வாங்கிட்டு வந்தேனே.

சோமு: அப்போ வந்தாளில்லே...

கருப்: பிரசவத்துக்கு ஒத்தாசை செய்ய வந்தா, அதுக்கென்ன?

சோமு: அதுக்கு வல்லே, இல்லே. அதுக்கு மட்டும் வரல்லே அவ மகன் மீனாட்சிசுந்தரம் இருக்கானில்ல...*(மீனாட்சிசுந்தரத்தைப் பார்த்து)* ஏய் மீனாட்சிசுந்தரம்...! தூங்கி விழுவாதே. அந்த சல்லடையிலே சாமானுங்க கலந்துகிட்டுக்கு பாரு, சுத்தமா பொறுக்கி வை.

மீனாட்சிசுந்தரம்: தூக்கம் தலையைச் சுத்துது.

சோமு: சல்லடையைக் கிட்ட வச்சுக்கிட்டுத் தூங்கேன், ஒங்க மாமன் வந்து பாத்துட்டு சந்தோஷப்படட்டும்.

மீனாட்சி: இல்லீங்க, இல்லீங்க. நான் சும்மா சொன்னேன். மாமன்கிட்ட சொல்லிப்பிடாதீங்க. *(மெதுவாய் எழுந்திருக்கிறான்)*

[மீனாட்சிசுந்தரம் ஒரு சல்லடையை எடுத்துக் கொண்டு உட்புறம் போய் உட்காருகிறான்)

கருப்: மேலே சொல்லு.

சோமு: அவன் ஆயா, மீனாட்சிசுந்தரத்துக்கு அடுத்த மாசமே படிச்சு எதுனாச்சும் சம்பளம் போட்டுக் குடுக்கணும்னு கண்டிச்சுச் சொல்லியிருக்கா மொதலாளியும் சரி இன்னார். தாச்சண்யமில்லெ.

கருப்: நாயந்தானே?

சோமு: இப்போ புரிஞ்சிச்சா?

கருப்: அதுதான் புரியல்லெ

சோமு: தலையிலெ களிமண்ணோ?

கருப்: எனக்கெப்பிடித் தெரியும்?

சோமு: வியாபாரம் சரியா நடக்காததுக்கும் மீனாட்சிசுந்தரத்துக்கு பொறக்கிற மாசமே புடிச்சு சம்பளம் போட்டுத் தரேன்னு மொதலாளி சொல்லி இருக்கறதுக்கும் கூடலேன்னுட்டு கண்ணுசாமியை வீட்டுக்குப் போகச் சொல்லிப்புடுவாரோ என்னமோ ஒலகத்துலே இதுதான் தமாஷ். அவனவன் கோட்டை மேலே கோட்டையாகக் கட்டி எதுனாச்சும் மனப்பால்

குடிச்சுக்கிட்டே இருப்பான். ஆனால் அவனைப் படுகுழியிலே தள்ள உச்ளூர் கறையான் மாதிரி அரிச்சுக்கிட்டுக் கிடக்கிற விசயம் மட்டும் அவன் மனதுக்குத் தெரியறதில்லே

கருப்: அப்போ, கண்ணுசாமிக்கி ரொம்ப கஷ்டமாப் போயிருமே. அவன் அண்ணனுக்குக் கூட வேலே போயிடுச்சாம். நல்ல வேளே. அந்த நாளுங்களிலே இத்தவம்பெல்லாம் இருந்திருந்தா ஏயப்பா!

கண்ணு: ஆமாம், மாமா. தாத்தா சொன்றது நெசம். அண்ணன் மொதலாளி அக்கரைச் சீமைக்குப் போயிட்டாரு—மஞ்சள் கடுதாசியை நீட்டிப்பிட்டு. அண்ணன் வூட்லே குந்தி இருக்கு மோட்டு வளையைப் பார்த்துக்கிணு எனக்கும் வேலையில்லாட்டிப் போயிட்டால் போற வழி?

சோமு: முதலாளின்னு இருக்கிற வரைக்கும் லாப நஷ்டக் கணக்குதான் பார்ப்பாங்க. என்னத்தைச் செய்யலாம்?

கண்ணு: பாரு மாமா, பாரு மாமா! நீ கூட இப்பிடிப் பேசறே. இந்த மீனாட்சிசுந்தரம் என்ன வேலை செய்யறான்! ஒண்ணுமில்லே அன்னைக்கி மொதலாளி கண்ணுக்கு எதிரவே ஒரு சேர் மொரளவாய்க்கு ஒண்ணரைச் சேராகப் போட்டுக்கட்டினான். சீ களுதெ! இம்மெ சாமான் கட்டாதேன்னார். அதுவும் நல்லதாத்தான் போச்சுன்னுட்டு நகத்தைக் கிள்ளிக்கிட்டு கடையிலே உட்கார்த்திருக்கான்.

சோமு: ஆமாம், தம்பி ஆமாம்!

கண்ணு: நான் செய்யற வேலையிலே நூத்துலே, ஆயிரத்துலே ஒண்ணு செய்வானா?

சோமு: மாட்டான். ஆனா அதிருஷ்டம் இருக்கே அவனுக்கு!

கண்ணு: நீதான் சொல்லேன் முதலாளிக்கு மீனாட்சிசுந்தரம் உப்புக் கல்லுக்குக்கூட பெரயோசனம் இல்லேன்னுட்டு

கருப்: ஏயப்பா! என்ன பேச்சுப் பேசறான்! மணிப்பயல்! அந்த நாளுலே எல்லாம் இந்த மாதிரி எங்களுக்குப் பேசத் தெரியாது.

சோமு: செ, நான் சொல்லலாமா? (கண்ணைச் சிமிட்டிக் கொண்டு) வேணா கிழவரைச் சொல்லச் சொல்லலாம். மொதலாளிக்கு மூச்சைப் போல கிழவரு

கருப்: ஏண்டா, தம்பி, கிழவனோடே என்ன தமாஷ்? நான் சொல்லியா மொதலாளி கேப்பாரு? இவரு அப்பாரு சாகக்குள்ளார சொன்ன பேச்சுக்காக என்னை வச்சுக்கிட்டு இருக்காரு—

கண்ணு: அதெல்லாம் போகட்டும். இதைச் சொல்லுங்க. காலம்பரவே புடுச்ச தட்டை ஒழிக்கச் சொன்னாரல்ல மொதலாளி?

சோமு: ஆமாம் இப்பத்தான் போயிருக்காரனே!

கண்ணு: அவன் திருடனுங்க. சோதா. நானல்ல தட்டை சரிப்படுத்தி வச்சிருக்கேன்.

சோமு: பின்னே அவன் எடுத்துக்கிட்டுப் போறானே?

கண்ணு: நீங்க மாமன்கிட்ட சொல்லப் போறீங்கனுட்டு அவன் சரி பண்ணினுப்லே காரம் பிக்கிறதுக்காக சரி பண்ணின தட்டை எடுத்துக்கிட்டுப் போயிருக்கான். பெரிய ஜாலக்காரனல்ல! நீங்க பாக்கல்லே!

சோமு: (சந்தேகப்பட்டாற் போல) ஏண்டா சொன்னு பாத்திருப்பியே.

கண்ணு: அப்போ சொல்லி இருந்தா திருட்டுத்தனம் எங்களுக்கு எப்படி தெரியும்.

கருப்: தம்பி, நீ பொளைச்சிடுவே. அந்த நாளுலே இப்பிடி எனக்கு பேசத்தெருஞ்சிருந்துன்னா நச்சே...

சோமு முதலி எழுந்துபோய் பார்க்கிறான். மீனாட்சிசுந்தரத்தின் கை கட்டில் கிடக்கிறது. கண்கள் மூடியபடியே தூக்கத்தால் சாய்ந்துவிழும் தலையை இரண்டொரு தரம் நிமிர்த்திக்கொடுத்துக் கொள்கிறான். பிறகு திடுக்கிட்டு கண்களைத் திறக்கிறான்.

சோமு: என்னடாலே இது?

மீனாட்சி: தூக்கம் தலையை சுத்தி சுத்தி அடிக்குது அண்ணே தட்டும் அநேகமா சரியாயிருச்சு.

சோமு: நீயா அதுக்குள்ளவா?

மீனாட்சி: ஆமாம் நான்தான். பின்னே யாரு? கைக்கொடுக்கரதுக்குள்ளார காரியங்கள் செஞ்சுப்புடுவேனே—ஆனா இத்தனை காலம் பரவே கொஞ்சம் சுத்தம் செஞ்சிருந்தேன்.

சோமு: (அதட்டி) பொளுகாதே.

மீனாட்சி: நெசம்மா

சோமு: கண்ணுசாமி செஞ்சேங்கறானே.

மீனாட்சி: பொளுகறான்.

சோமு: கேட்பேமா?

மீனாட்சி: ஓ!

(உட்புறத்திலிருந்து முன் பக்கம் வருகிறார்கள்)

சோமு: ஏ, கண்ணுசாமி! நீ பொய் சொல்றியாம். மீனாட்சிசுந்தரமல்ல சரி பண்ணி வச்சிருக்கானும்.

கண்ணு: ஏண்டா, நீயா செஞ்சே?

மீனாட்சி: (எகத்தாளமாக) இல்லே, நீதாண்டா!

கண்ணு: சரிடா, பொய் சொன்னுப்லேயே வச்சுக்கிருங்க. அடுத்த வாரம் கடையிலே விழற குப்பையை ரெண்டு தட்டுலே வச்சு ஆளுக்கொண்ணு கொடுத்தா ரோக்கியதை புரிஞ்சு போயிரது.

சோமு: எனக்கென்ன, ரெண்டுபேரும் அளக்கறுங்கன்னு சொல்லிடறேன்.

மீனாட்சி: எனக்கென்ன பயமா! மொதலாளி அக்கா பிள்ளைனுட்டு என் மேலே பொறுமை. அதை மறைக்கறதுக்காக் காட்டியும் கண்ணுசாமி இப்படி அளக்கிறானு நெசத்தைச் சொல்றேன்.

கருப்: ஏது பொல்லாத பயலாயிருக்கிறாயே, எனக்கெல்லாம் இப்போகூட இம்பிட்டு பேசத் தெரியாதுங்கறேன்.

மீனாட்சி: (அழுத்தமாய்) என்ன தாத்தா சொல்றே?

கருப்: (அசடுவழிய) ஒன்னுமில்லே

ரொம்ப கெட்டிக்காரன்னுதான் சொல்றேன்.

சோமு: (அதிகாரமாய்) சரிதாண்டா. வாலைசுருட்டிக்கிட்டு இரு. கிழவன், அசடுன்னு விரட்டினியோ—என்ன?

சோமு: போகட்டும். ஒன் புண்ணியத்துக்குப் பொழச்சும் போகட்டும்.

மீனாட்சி: (கொட்டாவி விடுகிறான்) ஓ ஹாவ்! காபி சாப்பிட்டால்தான் பொழைக்கலாம்.

கண்ணு: மாமன் இருக்கிற மகாராசன்களுக்கு குறைச்சல் என்ன? நெறையச் சாப்பிடு.

மீனாட்சிசுந்தரம் எழுந்திருந்து தெருப்படுதாவைத் தள்ளிவிட்டு தெருக்கோடியை ஒரு விநாடி பார்க்கிறான். அடுத்த நிமிஷம் திடீரென கூவுகிறான்.

மீனாட்சி: ஏ, நொண்டிப்பிள்ளை, ஏ, நொண்டிப்பிள்ளை! (இதரர்களும் எழுந்து தெருக்கோடியை பார்க்கிறார்கள்.)

சோமு: ஏண்டா மீனாட்சி. கண்ணுசாமி மேலே பாஞ்சியே பஜார் ரோட்டுலே அவ்வளவு பெரியவரைப் போய் அப்படிக் கூப்பிடுறியே, நல்லா இருக்கா?

மீனாட்சி: நான் காப்பி சாப்பிடற கிளப்புலே வேலை செய்யவராவருன்னு அவரு. ரொம்ப தமாஷ் ஆள். என்னோடே ரொம்ப சிநேகம். எதுனாச்சும் குத்தலாப் பேசாமே இருக்கமாட்டாரு.

கருப்: அவரில்லையே அது. கருப்பூர்லே இருந்து இங்கே வராரே. வாடிக்கைக்காரர். அவர் மாதிரியில்லே இருந்திச்சு.

கண்ணு: வாடிக்கைக்காரர்தான்

மீனாட்சி: (பயந்து) அவரா? இல்லேடா,

கண்ணு: ஆமாங்கறேன்.

சோமு: ஐயயோ! நாளைமத்தா நாள் கடைக்குவர வேணாடாம். வந்தா நம்மைப் பத்தி என்ன நெனைச்சுக்குவாரு?

மீனாட்சி: அவர்தான் நொண்டிப்பிள்ளையா இருக்காரோ உலகத்துக்கு?

கண்ணு: அதுக்கூன்னுட்டு கூப்பிடலாமாங்காட்டியும் செ!

சோமு: துடுக்கு ஜாஸ்தி இந்த மீனாட்சிக்கு. என்னவரப் போகுதோ இந்த வம்பாலே.

(கடைக்குள் யாரோ ஒரு ஆள் வந்து தாளை நீட்டுகிறான்.)

ஆள்: ஜாப்தாப்படி சாமானைக்குடுங்க

சோமு: (தாளைப்பார்க்கிறான்) மிளகாய் ஒரு வீசை காப்பிக்கொட்டை இரண்டு வீசை சக்கரை இரண்டு வீசை. பெருங்காயம் ஒரு டப்பா. கொத்தமல்லி விரை ஒரு வீசை அவ்வளவுதான். விருவிருன்னு எடுங்க பார்க்கலாம்.

(கருப்பய்யன், மீனாட்சிசுந்தரம், கண்ணுசாமி எல்லோரும் சாமான்கள் எடுத்துவரப் போயிருக்கிறார்கள். சோமுமுதலி பெருங்காய டப்பியைத் தேடுகிறான்)

சோமு: எதுனாச்சும் ஒங்க ஐயா வூட்டுலே விசேஷமா? சக்கரை வலுவாப் போகுதே.

ஆள்: விசேஷம்தான். வவுத்து விசேஷம் தான்—அண்ணே! கொஞ்சம் பனங்கல்கண்டு.

சோமு: (குத்தலாய்) ஜாப்தாவிலே காணுமே.

ஆள்: இல்லீங்க. திங்க.

சோமு: யாருக்கு—ஒனக்கா?

ஆள்: (குழறிக்கொண்டு) இல்லீங்க ஆமாங்க.

சோமு: பச்சைப்பிள்ளையாங் காட்டியும்.

ஆள்: (இளித்துக்கொண்டு) சூடு! பொக்கு பொக்குனு இருமுது. ரெண்டு வா போட்டுக்கிட்டா சொகமாயிடுமாம்.

சோமு: பெரிய குழந்தை! (என்று சொல்லிச் சிரித்துவிட்டு கொஞ்சம் பனங்கற்கண்டை எடுத்துக் கொடுக்கிறான்)

(தூங்கிக்கொண்டிருந்த கணக்குப்பிள்ளை எழுந்து மேல் வேஷ்டியை உதறி மேலே போட்டுக்கொண்டு கடையைவிட்டு இறங்குகிறான். முதலாளி 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிக்கொண்டே கடைக்குள் வருகிறார், பெட்டியருகில் உட்காரும்போதும் திருச்சிற்றம்பலத்தை அழைக்கிறார்.)

சோமு: எத்தனை நாளிடா?

(உட்புறத்திலிருந்து சாமான் எடுத்து வருகிறார்கள். மீனாட்சிசுந்தரம் கீழே படிக்கல் கிடந்ததை பார்க்காமல் இரண்டு வீசை சர்க்கரை என்று பொட்டலத்தை கீழே வைக்கிறான். படிக்கல் முனை கடுதாசை பொத்துவிடவே கொஞ்சம் சர்க்கரை கொட்டிப்போய் விடுகிறது.)

ஆள்: அடடா!

முதலாளி: (ஆத்திரம் பொங்க) காமாட்டி! காமாட்டி!

சோமு: பாதுட்டு வைக்கப்படாது?

முதலாளி: தொடக்காலிப் பயகளே. அது மாதிரி, இவன் தொட்டது தொலங்காது போலிருக்கு...பாரென் வியாபாரத்தை! இவனுக்கு சம்பளம் போட்டுக் கொடுக்கணுமாம்

சோமு: (சர்க்கரையை திரட்டிப்போட்டு புதுக்காகிதத்தில் கட்டிவிட்டு) அவ்வளவுதான் ஜாமான். கணக்குக்கச்சாதத்தெங்கே?

ஆள்: மறந்துபூட்டேன்.

முதலாளி: கலியாணப்பண்ணிக்க கை வீசிக்கிட்டு கடைக்கு வந்தாயாங் காட்டியும்!

ஆள்: கோவிச்சுக்காதீங்க. இதோ ஜாமான்களைப்போய் கொண்டு வச்சுட்டு வரேன்.

முதலாளி: எங்கே இருந்தய்யா வந்தான். மீனாட்சிசுந்தரம்! பெயர் அழகாத்தான் இருக்கு! மூஞ்சியைப்பாரு கபோதிப்பயல்!

கண்ணு: (குறுக்கிட்டு) இப்போ ஒண்ணு செஞ்சுட்டாங்க.

முதலாளி: சீ, கழுதை! கோன் சொல்றையா?

(கண்ணுசாமி தலையை சொறிந்துகொண்டு உட்புறம் போகிறான்)

முதலாளி: என்னடா சோமு?

சோமு: ஒண்ணுமில்லே. செறுபயல் தானே?

முதலாளி: (சிரிக்கொண்டு) என்ன தான்டு?

சோமு: நம்ப கடையிலே வாடிக்கையாச் சாமான் வாங்குவாரே!

முதலாளி: யாரு?

சோமு: கருப்பூர்லேருந்து வருவாரே, சின்ன மீசையா வச்சுக்கிட்டு — மொளங்காலில் வாமே, சங்கரம் பிள்ளை

முதலாளி: நொண்டிப் பிள்ளையா? சரி தான்

சோமு: அவரு செத்த நேரத்துக்கு முன்னுலே தெருக் கோடியிலே போனரு. மீனுட்சி சுந்தரம் அவரைப் போய் நொண்டிப்பிள்ளைன்னு ஒரட்டு கூப்பிட்டான். அவர் திரும்பிக்கூடப் பாக்கல்லே. என்ன நினைச்சுக்குவாரு நம்ப கடையைப் பத்தி?

முதலாளி: (கோபத்தால் துடித்துக் கொண்டு) ஏ. காவாடி! கூப்பிட்டியா?

மீனுட்சி: நான் கூப்பிடல்லியே

சோமு: என்ன தம்பி, இவ்வளவு பேரும் பாத்தோமே

முதலாளி: கண்ணுசாமி! இவன் கூப்பிட் டானு?

கண்ணு: நல்லா ரெண்டு வாட்டிக் கூப் பிட்டான்

முதலாளி: என்ன கிழவனுரே?

கருப்: (அசட்டுச் சிரிப்புடன்) அப்படித் தானுங்க.

மீனுட்சி: நான் அவரைக் கூப்பிடல்லிங்க.

முதலாளி: (பொறுமை இழந்து) காமாட் டிக் கழுதை! இத்தனை பெருமா பொளுவருங்க! குதிரை கீழ தள்ளிச்சாம். கொஞ்சம் குழி வேறே பறிச்சுதாம். மூஞ்சியைப் பாரு. (மீனுட்சிசுந்தரத்துக்கு நாலு செம்மையாகப் பூசை) இப்பொவே ஊர் போய்ச் சேரு. அக் காளுக்கு நான் சொல்லிக்கிறேன்.

[மீனுட்சிசுந்தரம் அழுகிறான்]

கருப்: ஏதோ தெரியாத்தனமாக. மன்னிச் சுடுங்க. இப்பிடித்தான் ஒங்க அப்பாரு நாளுலே—

முதலாளி: இவன் ஊருக்கு எப்போ மோட் டார் போவுது?

சோமு: இந்த வாட்டி மாப்பு பண்ணி டுங்க

முதலாளி: ஒனக்கு ஒண்ணும் தெரியலே. சும்மா இரு. மோட்டார் எப்போ?

சோமு: இப்ப வற நேரம். (ஊதுகுழல் கேட்கிறது) இதோ வந்துடிச்சு.

முதலாளி: இப்படியே ஏத்தி விட்டுடு களு தையை இந்தா டிக்கட்டுக்கு காசு.

[சோமுவுடன் மீனுட்சிசுந்தரம் தலையைத் தொங் கப்போட்டுக்கொண்டு கடையைவிட்டு இறங்குகிறான்]

(திரை)

காட்சி-2

[ஒரு பத்து நாள் கழித்து மாலே மூன்று மணி. அதே கடை, முதலாளி, சோமு, கண்ணுசாமி முதலி யவர்கள் கடையில இருக்கிறார்கள்]

முதலாளி: அந்தப் பயலே அனுப்பிச்சதுலே அக்காவுக்கு கோவம் போலே இருக்கு. இல் லாட்டி ஏன் அனுப்பிச்சுட்டேன்னு ஒரு கடுதாசி யாவது போட்டிருக்க மாட்டா?

சோமு: அவனை மாப்பு விட்டிருக்கலாம். அன்னிக்கு ரொம்ப கோபம் வந்திரிச்சு உங்க ளுக்கு.

முதலாளி: இல்லாட்டி கண்ணுசாமியை ஊட்டுக்கு அனுப்பி இருக்கணும். ரெண்டு பேருக்கு சம்பளம் குடுக்கக் கட்டுமா? ஆனு ஒண்ணு. கண்ணுசாமி ஏழை. ரெண்டு வேலே செய்வான். அவனைப் போகச் சொன்ன அவ னுக்கு கஷ்டமாப் போயிடுமென்னு நினைச்சேன். நல்ல வேளையா இப்படி நேந்து போச்சு ஏ, கண்ணுசாமி ஒன் அண்ணனுக்கு வேலே கிடைச் சுதாடா?

கண்ணு: இல்லீங்க ஊட்லே சாப்பாட் டுக்குத் தாளங்க.

முதலாளி: பாத்தியா சோமு! அப்புறம் பாரு; மீனுட்சிசுந்தரம் வந்ததே பிடிச்சு வியா பாரம்கூட சரியா நடக்கல்லே ராசிப் பொருத் தம் வேண்டாமா? அதான் அவனைப் போகச் சொன்னதும் பொருததமாப் போச்சு.

சோமு: என்ன இருந்தச்சன்னலும் ஒங்க அக்கா மனசு தாங்காதத்தான் இருக்கும்

முதலாளி: எதுக்காக? பய கொணத்தைச் சொன்னப் போகுது

[கருப்பூர் சங்கரம் பிள்ளை, நொண்டிப் பிள்ளை நுழைகிறார். முதலாளி முகம் உள்பட எல்லோர் முகமும் அசடு தட்டுகிறது]

சங்கரம் பிள்ளை: என்ன மொதலாளி சவுக்யமா?

முதலாளி: வாங்க. சௌக்யம்தான்...அந் தப் பயல் சிறுசு, அசடு......ஒண்ணும் தெரியா துங்க.

சங்கரம்: (விழித்துக் கொண்டு) யாரு?

முதலாளி: நம்ம பயல்தான்.

சங்கரம்: கண்ணுசாமியா?

முதலாளி: மீனுட்சிசுந்தரம்.

சங்கரம்: உங்க அக்கா மவனு?

முதலாளி: ஆமாம், காலிப்பயல். மரி யாதை இல்லாமெ நடந்துக்கிட்டான்னு எல் லாரும் சொன்னுங்க

சங்கரம்: ஆளு கடையிலே இல்லையா?

முதலாளி: இப்படி எகிலாம் ஒங்ககிட்ட நடக்கிறவனே ஒரு நிமிஷம் வச்சிகிடுவேனு? ஒடனே விரட்டிவிட்டேன்

[முதலாளியின் தமக்கை மீனுட்சிசுந்தரத்துடன் கடைக்குள் நுழைகிறாள். முதலாளியின் முகம் குழப்பம் அடைகிறது இதரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள்]

முதலாளி: எப்போ வந்தே அக்கா?

தமக்கை: நீ கடைக்கு வந்தப்புறம். அடுத்த பஸ்ஸிலே ஊருக்குப்போகணும். அதான் சொல்லிக்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.

முதலாளி: (குழப்பத்தோடு) மீனுட்சிசுந் தரத்தைக் கேட்டியா என்னன்னுட்டு?

தமக்கை: அவன் என்னுகிட்டே என்ன வெல்லாமோ சொன்னன். நானு நம்புவேன்?

இங்கே வூட்லே வந்து எல்லாம் தெரிஞ்சுக்கிட் டேன். இல்லாட்டிப் போனா அவ்வளவு கோபம் வந்திருக்குமா? எனக்கு... கழிசடை?.

முதலாளி: நிஜமா இல்லையா, இவரைக் கேட்டுப் பாரு, இவர் தான்...

சங்கரம்: (பயந்து) எனக்கென்ன தெரியும்? ஒண்ணும் தெரியாதுங்களே.

முதலாளி: சும்மாச் சொல்லுங்க.

தமக்கை: எனக்கு ருசுப் பண்ண வேண் டாங்கறேன் நீங்க எல்லாம் பொய்யா சொல் லப் போறிங்க? இது என்ன வெக்கக்கேடு!

சங்கரம்: எனக்கு ஒண்ணும் விளங்கவே இல்லியே

முதலாளி: என்னய்யா ரொம்ப பிகு பண்றே! பத்து நாளைக்கு முந்தி நீங்க மத்தி யானமா கடைத்தெருவுக்கு வந்தப்போ—

சங்கரம்: (குறுக்கிட்டு) நான் வர இல் லியே!

முதலாளி: மீனாட்சிசுந்தரம் ஒங்களைக் கூப்பிட்டான்.

சங்கரம்: நான் வரவும் இல்லெ இவன் கூப்பிடவும் இல்லியே

மீனாட்சி: (தலையாரை முழங்கையால் இடித்து) பார்த்தியா?

முதலாளி: என் தமக்கைதான். பையன் தாயார்தான் ஐயா. சும்மா உள்ளதைச் சொல் லுங்களேன் ஐயா.

சங்கரம்: இதென்னய்யா இது! எனக்குப் பொய் சொல்லணும்னு ஆசையாங் காட்டியும்; நான் வரலேங்கறேன். வேறே யாரையாவது பார்த்துட்டு—

சோமு: மத்தியானம் ரெண்டு ரெண்டரை மணி இருக்கும்.

சங்கரம்: போன அமாவாசைக்கு மொதல் நாள் நான் இங்கே வந்து சாமான் வாங்கினேன் பாருங்க. அதுக்கப்புறம் இப்பத்தான் வரேன்.

மீனாட்சி: இவரைக் கூப்பிடல்லேன்னு அப் போவே பிடிச்சுத்தான் சொல்றேனே காபிக் கிளப் தொண்டிப் பிள்ளையைக் கூப்பிட்டேன்.

[மீனாட்சிசுந்தரம் அழுகிறான். முதலாளி முகத் தில் ஈயாடவில்லை.]

சங்கரம்: ஏன் முதலாளி, நடுத்தெருவிலே என்னை இப்படிக் கூப்பிட்டு அவமானப்படுத்திட் டானுட்டு அவனை ஊருக்கு அனுப்பிச்சுட்டிங் களாங்காட்டியும்!

தமக்கை: போவுது போ! ஏடா தட்டுக் கிடல்!

முதலாளி: (கோபம் பொங்க) என்னாங் காணும் சோமு முதலி! நீகூட இப்படி புளுக ஆரம்பிச்சுட்டே. பாவம், பயலை அடிச்சுக் கூடப் போட்டுட்டேன், ஒங்க பேச்சை நம்பிக் கிட்டு.

சோமு: கிழவனாரும் கண்ணுசாமியும் சொன்னதைத்தான் நான் கேட்டேனுங்க.

முதலாளி: என்ன கிழவனாரே! கண்ணு சாமி! தடிப்பயலே. ஒங்க நடவடிக்கை விளங் கவே இல்லையே.

முதலாளி: டேய்! அழுவாதேடா, (மீனாட்சி சுந்தரம் தேம்புகிறான்.)

மீனாட்சி: (தேம்பல்களுக்கு இடையில்) இவுங்க சமாச்சாரம் ஒங்களுக்கு தெரியாதுங்க மாமா. என் மேலே பொச்சரிப்பு. கண்ணு சாமிக்குப் பரிஞ்சுக்கிட்டு இப்பிடி சொல்லீட் டாங்க அவனுக்கு வேலை நிலைக்குதோ நிலைக் காதோங்கற பயம்.

தமக்கை: நிறுத்துடா, ஜாலக்காரா! ரொம்ப நல்லவன்தான் நீ!

முதலாளி: இப்பத்தான் புரியுது, இப் பொதான் புரியுது.

சோமு: நீங்க என்ன, என்னைப்பத்திக்கூட அப்படி நினைச்சுப்பிட்டீங்க?

முதலாளி: என்ன கிழவனாரே!

கருப்: (அசட்டுச் சிரிப்புடன்) இதாலெ சொல்றேன். கேட்டுக்கிட்டு அப்புறம் சொல் லுங்க. ஒங்க ஐயா கடையிலே வந்த பிறகு மூணு மாசம் இருக்கும். சுண்ணாம்பு வாங்கிக் குடுத்து வெள்ளையடிக்கச் சொன்னாங்க வீடு முழுக்க பால் போல வெள்ளையடிச்சேன் கொஞ் சம் மிஞ்சி இருந்திச்சு வீணாக்கப்படாதல்ல. ஒரு பெரிய பெஞ்சு இருந்திச்சு அதுங் கால்களுக்கு சுண்ணாம்பை அடிச்சுட்டு ஒரு நாற்காலிக்கு அடிக் கிற சமயம், உங்க ஐயா வந்து நான் செஞ்ச தைப் பாத்துட்டு விளுந்து விளுந்து சிரிச்சாரு. இவ்வளவு நல்ல பிள்ளையானுட்டு அந்த மாசமே பிடிச்சு சம்பளம் போட்டுக் குடுத்தாரு. அந்தக் கருப்பய்யனா புளுகுவான்? வந்து—

முதலாளி: அது போறது. நீ கதை பண் ணாதே. போதும்.

கருப்: கருப்பய்யனா புளுகுவான்? கண் ணுக்கு இவுரு மாதிரித்தான் பட்டுச்சு. கண்ணு சாமிகூட அப்படித்தான் சொன்னான்.

கண்ணு: நான் எங்கே அப்பிடிச் சொன் னேன்?

முதலாளி: தெரியும்டா.

சங்கர: ஆனது ஆபிடுச்சு விடுங்க பசங் களை. நல்ல தமாஷ் இந்த ஜாமானை கட்டி வையுங்க பூக்கடைக்குப் போய்ட்டு வாறேன்.

[சங்கரன் பிள்ளை போகிறார்]

முதலாளி: நல்ல வேடிக்கை!

மீனாட்சி: மாமா இருக்கிற மவராசன்னு கண்ணுச்சாமி வவுத்தெரிச்சல் பட்டானா இல் லையா கேளுங்க.

தமக்கை: செ, களுதை! சும்மாக் கிட!

முதலாளி: அதெல்லாம் கிடக்கட்டும். இதெல்லாம் அண்ணைக்கு ஏண்டா சொல்லல்லே?

மீனாட்சி: ஒங்களுக்கு வந்த கோபத்திலே எனக்கு பயமா இருந்திச்சு.

முதலாளி: போடா மடையா, கண்ணு சாமி வேலையை காப்பாத்திக்கிறதுக்கா செஞ் சான்! நல்லது தம்பி, கண்ணுச்சாமி, உன்னைப் போல மவராஜனுங்க இருந்தாலே கடை கெட்

டுப் போய்விடும். இதாலே கணக்குப் பார்த்து சம்பளத்தை வாங்கிக்கிட்டு கீழே இறங்கிவிடு.

தமக்கை: சோவச்சுக்காதே. பசங்களே இப்படித்தானிருப்பானுங்க.

கண்ணு: நான் சுத்தம் செஞ்ச தட்டை அவன் செஞ்சேன்னு சொன்னுன்னு இல்லியா நீங்களே கேளுங்க.

[கண்ணுசாமியின் தாயார் அங்கே வருகிருள்.]

முதலாளி: (கோபத்தை அடக்கிக் கொண்டு) எங்கம்மா வந்தே?

அங்கம்மா: எஜமானே பார்த்திட்டுப் போகத்தான்

முதலாளி: பார்த்தாயிடுச்சா? பின்னே போயிட்டு வா...பளிச்சுன்னுகாரியத்தைச் சொல்லுவியா?

அங்க: (முந்தானையை சேஷ்டை செய்து கொண்டு) பத்துப் பதினேந்து நாளா எசமானனே பார்க்கணும்னுட்டு, ஒளியலீங்க.

முதலாளி: எதுக்கு?

அங்க: சாப்பாட்டுக்கு வூட்டுலே ரொம்ப கயிஷ்டமாப் போயிடுச்சு. வீடு கூட்டறதிலே நாலு ரூவா சம்பாதிக்கறேன். கண்ணுசாமி கொஞ்சம் ஒங்கதயவுலே கொண்டாருன். பெரிய மவன் இப்போ சம்பாரிக்கறதே இல்லே அப்படி ரெண்டு காசு சம்பாரிச்சாலுக்க குடிச்சுட்டு வந்து மோட்டு வளையைப் பார்த்துக்குனு குந்தி இருக்கானுங்க. இப்படியே ஒரு மாசம் ஆகப் போவுது.

தமக்கை: பாவம்.

முதலாளி: எப்பவுமே குடிப்பானு?

அங்க: சும்மா சொல்லப்படாது. இப்பத் தான் ஒரு மாசமா. இவன் மொதலாளி கடை ஒகி ஓடிப் போயிட்டதிலே இருந்து இவனுக்கு ஒழுங்கான வேலே இல்லே. அதான். அவன பெண்சாதி வேறே பிள்ளேத்தாச்சிங்க.

முதலாளி: அதுக்கென்ன பண்ண?

அங்க: இந்தப் பயலுக்கு—

முதலாளி: கண்ணுசாமிக்குத்தானே?

அங்க: ஆமாங்க ரெண்டு மூணு வருசமா இருக்கிறனே. எதுனும் சம்பளத்துலே கூடுதலாய் போட்டுக் கொடுக்கனும்னு கேக்கலாம்னு வந்திருக்கிறேனுங்க. பத்து நாளைக்கு முந்தி சோமு முதலியாரு கிட்டேகூட சொலலியிருந்தேனுங்க.

முதலாளி: நீ ஓளைக்கிறதுதான் மிச்சம் இதெல்லாம் கலவைக்கு ஒதவாது இப்பொத்தான் இவனேக் கடையை விட்டு விரட்டிடறதுன்னு பேசிக்கிட்டு இருக்கேன்.

அங்க: (கண்ணுசாமியை அடிக்கப் பாய்கிருள்) தமக்கை தடுக்கிருள். அவனே உரிச்சுப் புடணும். எதுனச்சும் திருடிப்பிட்டானு?—அப்பிடி ஒண்ணும் செஞ்சுடாதீங்க...(கும்பிட்டு நமஸ்காரம் செய்கிருள்) நாங்க தின்கிற சோறு உங்க தர்மம் இருக்கட்டும்...நான் என்னுதனதச் செய்வேன். சாமி. களுதை என்ன செஞ்சான்?

முதலாளி: பொளுகருன், இவனுலே என் அக்கா மவனுக்கு நல்ல அடி. அவனே வேறே ஊருக்கு விரட்டிவிட்டுட்டேன். இப்பத்தான் இவன் பொய் தெரிஞ்சிச்சு கண்ணுசாமி. போலே ரெண்டு பசங்க கடையிலே இருந்தா நெஜம் பொய்யாயிடும். பொய் நெஜம்மாயிடும்

அங்க: தூ! களுதை செஞ்சது பிசகுன்னுட்டு எசமான் காலிலே உழுடா

கண்ணு: கிழவனுருதான் அப்படிச் சொன்னுரு. எனக்கும் அப்படித்தான் தோணிச்சு.

அங்க: போதுமடா! உழுடா காலிலே... எஜமான் நீங்கதான் காப்பாத்தணும் நீங்க வச்ச விளக்கா இருக்கும். பெரிய மவன் வூட்டுலே கிடையை பார்த்துட்டு இவனுக்கும் வேலே போயிடுச்சுன்னு என்னு பண்றதுன்னு எதினச்சும் சொல்லி இருக்கானே என்னமோ. நீங்க தான் காப்பாத்தணும், உழுடா காலிலே. (அங்கம்மா கும்பிடுகிருள் கண்ணுசாமி நமஸ்காரம் செய்கிருன்)

தமக்கை: போடா தம்பி...ரெண்டுபேரையும் வச்சுக்கோ சுரணே வந்திருக்கும் பசங்களுக்கு இனிமே சரியாய் போயிடும். (பஸ்ஸின் குழல் ஊதுகிறது) அதோ வண்டிகூட வந்திடுச்சு

முதலாளி: இருந்துட்டு நாளைக்குப் போயேன

தமக்கை: இல்லே, நாத்து காயுது போகணும்.

முதலாளி: வூட்டுலே சொல்லிக்கிட்டு கூட போகவேணுமா?

(பஸ் கடை வாசலில் நிற்கிறது.)

தமக்கை: கடையிலே தம்பியோடே பேசிப்பிட்டு அப்படியே ஊடுக்குப் போறேன்னு சொல்லிப்பிட்டுத்தான் வந்தேன். மீனுட்சி சுந்தரத்தைப் பார்த்துக்கோ. அந்தப் பயலேயும் வச்சுக்க. ஆண்டவன் இருக்காரு...

'தமக்கை பஸ்ஸில் ஏறிச்செல்கிருள், மீனுட்சி சுந்தரம் கடைக்குள் போகிருன். முதலாளி நெற்றியைத்தடவிக் கொள்கிருர். பெருமூச்செறிகிருர்.

அங்க: ஒங்க தங்கவாயாலே சொல்லுங்க—கண்ணுசாமியை அப்புறம் அனுப்பலேன்னு குடுக்கற சம்பளம் போதும்

யாரோ சாமான் வாங்க வருகிருர். ஜாப்தாவை முதலாளி வாங்கிக்கொண்டு ஒரு விநாடி திகைக்கிருர். மறுவிநாடி,

முதலாளி: (நிஸ்திராணியாய்) ஆண்டவன் காப்பத்தணும்...நெஜம்தான் மீனுட்சிசுந்தரம்! முந்நூறு கொட்டைப்பாக்கு சுத்தமா எண்ணிக் கொண்டா. கண்ணுசாமி! வெல்லம் ரெண்டு வீசை கட்டு...சோமு! குங்குமப்பூ ரெண்டணுவுக்கு. கிழவனுரே நீங்க தலையை சொறிஞ்சுக்கிடுங்க...

அங்க: மவராசனு இருப்பீங்க பயத்திலே பால் வாத்தீங்க (கும்பிட்டு விட்டு) நான் வரேனுங்க ஆண்டவன் இருக்காரு—(அங்கம்மா போகிருள்.)

(திரை)

சிறுகதை

ரோஜாவின் அவதாரம்

சங்கு ஸுப்ரஹ்மண்யன்

['இயற்கையைத் திரித்து கற்பனைக் கதைகள் ஜோடிப்பதில் ஆரியருக்கும் கிரேக்கருக்கும் பிரதிபை மிகுந்திருந்தது. ஒளி, எதிரொலி, வானவில், நக்ஷத்திரம் முதலிய இயற்கை அன்னையின் குழந்தைகளை சித்தரித்து எவ்வளவோ கதைகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. நம்மைச் சுற்றிலுமுள்ளவைகளை மறந்து கனவுலகிலேயே கருத்து வைக்கும் அறிஞருக்கு அக்கதைகள் பெருவிருந்தாக உள. தமிழ் மொழியில் சிறுகதை உலகில் அத்தகைய ஒன்றிரண்டைக் கையாண்டு செவ்வனே எழுதியவர் மஹரிஷி வ. வெ. சு. அய்யர் ஒருவர்தான். அவருடைய 'எதிரொலியாள்' என்ற கதையின் ரீதியைத் தழுவி இந்த வேறொரு கதையைத் தருகிறேன்'

என்று சங்கு சுப்ரமணியன் ஒரு சிறு முன்னுரை எழுதி இருக்கிறார். இந்தக் கதை சுதந்திரச்சங்கு வாரப் பதிப்பில் (27 4 34) மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கதை அதுக்கு முன்பே வேறொரு பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. 'சரஸ்வதி' என்ற பெயரில் எழுதி இருக்கிறார். ஆனால் அவர் கதைகளை ஒட்டி வைத்திருக்கும் நோட்டிலிருந்து அது எந்த பத்திரிகையில் வந்ததென்று தெரியவில்லை.]

அந்த நிலவின் அவாங்மயமான ஒளியில் பிரகிருதி தேவியின் இன்ப வெள்ளத்தில் ஸ்ரீதியானு தேவியின் எதிரே ரோஷாந்தா நின்றிருந்தாள். வீரருக்கும் கலைஞருக்கும் தென்படாத அந்தத் தேவதை இந்தச் சிறுமிக்குக் காட்சி தந்தது வியப்பிலும் வியப்பே. ஆனால் உயிரினும் மேலானதான பக்தியை அர்ப்பணம் செய்த ரோஷாந்தாவின் முன் தியானுத்தேவி தரிசனம் தராது இருப்பாளா!

அந்த வெண்ணிலவில் வெண்கல்லில் ஆக்கப்பட்டிருந்த தியானுவின் சிலை தன் உதடுகளை அசைத்தது விந்தை! வீணையினும் இனிய குரலில் பேசவும் ஆரம்பித்தது.

'கண்மணி, ரோஷாந்தா' என்னை ப்ரேமை என்னும் பாசத்தால் பிணைத்துவிட்டாய். உனக்கு என்ன தருவது என்று எனக்கே விளங்கவில்லை. உனக்கு என்னதான் வேண்டும்? அச்சமின்றிக் கூறு, என்று அந்தக் கன்னித்தெய்வம் கேட்டது.

சிறுமிக்கு வியப்பு உணர்ச்சி அடங்கிச் சிந்தனை அலைகள் சேர ஆரம்பித்தன. அன்னையின் வெண் பாதங்களில் வெண் தாமரை மலரொன்றை யிட்ட பின்பு அச்சிறுமி அருளொழுகும் அக்கண்களை அண்ணாந்து நோக்கினாள்.

'அம்மா, உலகை மோஹிக்கச் செய்வது எது?' என்று கேட்டாள். அன்னை முகமலர்ச்சியோடு ஒரே வார்த்தையில் விடை அளித்தாள்.

'அழகு'.

'அம்மா, எனக்கு அதைத் தருவாயா?' என்று சிறுமி தட்டுத் தடுமாறிக் கொண்டே கேட்டாள். அந்த வெண்ணிலவில் அந்த பெண் பிம்பம் பல் வரிசையைச் சிறிது காட்டி புன்னகை புரிந்தது.

'அசடே, அழகா வேண்டும்? உலகை மோஹனம் செய்யவா வேண்டும்! தந்தேன்' என்று கூறியது தேவதை. பிறகு அந்தக் குரலைக் காணோம் வெறும் கல்தான் எதிரே இருந்தது

இந்தக் கோரிக்கையை அடைந்த பின்னர் ரோஷாந்தா தன் தகப்பன் வசிக்கும் ஊருக்குத் திரும்பிவிட்டாள்.

ரோஷாந்தையின் தந்தை அந்த ஊர்ச் சிறையில் கொலையாளி உத்யோகம் பார்த்துவந்தான். உயிரை உடலிலிருந்து பிரிப்பது பழத்தைத் தோலினின்று விலக்குவது போன்ற சாதாரணச் செய்கையென அவன் நினைத்திருந்தான். செய்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் தகுந்தவாறே மனிதனின் உருவம் மாறுவது வழக்கம் என்பார்கள் ஆதலால் அந்தக் கொலையாளியின் கட்டமைந்த தேகம் நாளுக்கு நாள் மாறுதலடைந்து உலகத்திலுலாவும் பூதம் போன்ற உருவத்தை அடைந்துவிட்டது தெருவில் அவனுடைய உருவத்தை குழந்தைகள் கண்டால் அவை உடனே பிரமிப்படைந்து செத்துப் போய் விடுமாம்! இத்தலைகய சாவு தேசத்தில் மிகுந்து விடவே அவன் நகரத்தில் இனி உலாவக் கூடாதென இராஜாக்கினை பிறந்திருந்தது.

குடிசையின் கதவை அவன் திறந்ததுதான் தாமதம் 'ஐயோ மோஹினி பிசாசு!' என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தான், அது மோஹினியுமல்ல பிசாசுமல்ல அவனுடைய செல்லக்குமாரி தேவதையின் அருள் பெற்று அழகு வடிவு பெற்று வந்திருக்கிறாள் என்பது அவனுக்கு எவ்வாறு தெரியும்? கொஞ்ச நேரத்துக்கு முன்னே அவளைப் பெற்றெடுத்தவளுக்கும் குமாரியின் அடையாளம் தெரியவில்லை என்றால் அதில் அதிசயமொன்றுமல்ல. ஏனெனில் ரோஷா அவ்வளவு மாறுதலடைந்திருந்தாள்.

கொலையாளிக்கும் அவள் மனைவிக்கும் இந்த உலகத்தின் நினைவுகள் ஏற்பட்ட பின்னர் ரோஷாந்தா தன் சரிதத்தை முற்றிலும் கூறினாள். நாழியாக ஆக கொலையாளிக்கு விதம் விதமான யோசனைகள் உண்டாயின.

தன் பெண்ணின் அருகே வந்து அசங்கிய மான கைகளால் அந்தத் தூய மெல்லிய மேனியைத் தடவி 'சரி, ரோஷா! உனக்கு இனிமேல் கலியாணம் பண்ணனும். நம்ப ராசாமவன் உன்னைப் பார்த்தாக்க கடிச்சுத் துன்னுப் புடுவான்!' என்று அடுக்க ஆரம்பித்தான்.

பெற்றவர்களின் காட்டுமிராண்டித் தன

மான அந்த வார்த்தைகளும் நடத்தைகளும் ரோஷாந்தாவுக்கு வியாகூலத்தை விளைவித்தன 'அம்மா, இப்போது எனக்கு பசிக்கிறது. சோறு போடு அப்புறம் பேசலாம்' என்றாள் ரோஷா. அந்த எளிய உணவை வேறு கதியின்றி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மறுபடியும் கல்யாணப் பேச்சு நுழைந்துவிட்டது: ரோஷா சிறிது கடுப்புடன், 'அம்மா, எனக்கு அழகு வரம் தந்த தேவதை கல்யாணம் பண்ணிக்கொள்ளலாகாது என்று கட்டளையிட்டிருக்கிறதே' என்று கூறினாள்

'கண்ணாலம் பண்ணிக்காத சிவன் ஒருசிவனா' என்று கொலையாளி ஹூம் போட்டுக்கொண்டே ஏதேதோ கூறினான் இப்படியாக அன்று இரவு கழிந்தது கொலையாளியின் வீட்டின் தேவ கன்னிகையிலும் அழகு மிகுந்த ஒரு வனிதை இருந்த செய்தி காக்கை தபாலில் தேசமெங்கும் பரவிவிட்டது. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றழைப்பதுண்டா? அதே போல நல்ல ரூபவதிகளைப் பார்ப்பதற்கு இளைஞர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வேண்டாமன்றோ! மறுநாள் மாலை இந்த விஸ்வமோஹினியைப் பார்ப்பதற்கு ஊரினின்றும் திரளான ஜனங்கள் கூடிவிட்டனர். அரசகுமாரனும் வந்திருந்தான். ரோஷாவுக்கு வெளியில்வருவதற்கே வெட்கமாயிருந்தது. ஆனமட்டும் அப்பனும்ஆயாளும் அரசகுமாரனை மணந்துகொள்ள அவளை மன்றாடினர் ஒன்றும் பலிக்காது போகவே கோபமடைந்து அவளை வீட்டை விட்டு வெளியே தள்ளிவிட்டனர் அவ்வளவுதான். தடியர்கள் நான் முந்தி நீ முந்தி என்று தள்ளிக்கொண்டு அவளைத் தொடர ஆரம்பித்தனர்.

அரசகுமாரனிடம், தான் தியான தேவியின் அருட்குமாரி என்றும் கன்னிகையாகக் காலம் கழிக்க வேண்டுமென்றும் தன்னைக் காலரடிகள் கூட்டத்தினின்று காப்பாற்ற வேண்டுமென்றும் ரோஷா கேட்டுக்கொண்டாள் ஆனால் அரசகுமாரன்தான் அந்த காலரடிகளுள் முதல் தாம்பூலம் பெறுவதற்கு அருகதையானவனாக இருந்தானெனில் அவள் என்ன செய்வாள் பாவம்!

அழகில் அவளுக்கு தெவுட்டிவிட்டது, வெறுப்புத் தட்டிவிட்டது என்றும் சொல்லலாம் தாய் தந்தை யாராலும் அரசனாலும் குடிபடைகளாலும் எல்லோராலும் 'தொந்தரவு' ஏற்படவே தெய்வமே கதியென்று ரோஷா ஓடினாள்.

சந்திரன் எழும் தருவாயில் அவனது தண்ணொளியையும் வெட்கச்செய்யும் மேனியுடைய இந்த அழகி அந்த வனத்தினூடே கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். பட்டதும் படாததுமாக பாதங்கள் நடந்தன. பொந்தும் வெளியும் அவளது தெய்வீக ஒளியுண்டய மேனியை மறக்கவில்லை. உலகச் சம்பிரதாயமாக தூய சிறு சிவப்பு ஆடையொன்று மட்டும் அவள் மீதிருந்தது. பரந்து தொங்கி பாதத்தை யெட்டும் கூந்தல் பின்புறத்தில் வழிந்து தொங்குவது அவளது மேனிக்கு பகைப்புலனாய் வாய்த்தது, இன்னும் பகட்டாக எடுத்துக் காட்டிற்று. அழகின் வரம்பு ரோஷாந்தையின் உருவம்தான் என்று தேவதைகளும் நினைத்தார் களாகும்.

உலகம் உண்டானதிலிருந்து மனிதன் அழகை வணங்கி வாழ்ந்ததில்லை. அழகான பொருள் எதைப் பார்த்தபோதும் உடனே சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சிதான் அவனுக்கு ஏற்படுகின்றது. அழகான நாட்டைக் கண்டால் அதைவென்று ஆளவேண்டுமென்ற உணர்ச்சியை நாம் நிதர்சனமாகப் பார்க்கவில்லையா? ஆனால் அடைந்த பிறகு அந்த அழகுப் பொருளைக் காப்பாற்றுவதில் அக்கறை நாளுக்குநாள் குறைவு படுவதையும் காண்கிறோம். இதுதான் மனிதஜாதிக்கும் அழகுக்கும் உள்ள சரியான சம்பந்தமோ? எவ்வளவோ ரஸ்கின்களும் தாந்தேக்களும் பாஸர்களும் தோன்றினாலும் மனிதன் அப்படியேதான் இருக்கிறான் அதை அறிந்துதான் தியான தேவி ரோஷா விவாகம் செய்து கொள்ளலாகாது என்று கட்டளையிட்டாள் போலும்.

வெட்கம், ரோஷாவின் பின்னால் கணக்கில்லாத காலிகள் பின்தொடர்ந்து போன வண்ணமே இருந்தனர். நான்கு பெண் பெற்றவரும், நரைத்தலைக்கிழங்களும். வீர இளைஞர்களும், வீண் பொழுது போக்குபவரும் அரசரின் குமாரரும் அருங்கவிதை பாடுவோரும் அவளைப் பின் தொடர்ந்து சென்ற காட்சி மனிதஜாதிக்கே வெட்கக் கேடாயிருந்தது.

கடைசியாக அந்த அழகி தியானதேவியின் சிலையருகே ஓட்டமடியும் வந்தாள். காமியரும் கோயிலுக்குத் தொடர்ந்தனர். அங்கு மேடையின்மேல் நின்றிருந்த அன்னையின் பாதங்களில் அற்ற மரமென வீழ்ந்தாள். ரோஷாந்தா. ''அம்மாடி, எனக்கு அழகு வேண்டாமடி.'' கயவரிடமிருந்து என் கன்னித் தன்மையை நீதான் காப்பாற்ற வேண்டும்'' என்று அவளது வாய் முணுமுணுத்தது.

கீழே கிடக்கும் ரோஷாந்தையின் உடலை மனிதஓநாய்கள் சுற்றிக்கொண்டன. சிலர் தங்கள் கைகளால் தொடவும் துணிந்தனர். ஆனால் அந்தத் தேவதையின் சக்தி மீண்டும் சிலையுள் வந்து நின்றது. தேவியின் கைகள் கூட்டத்தை நோக்கி ஒருதடவை அசைந்தன. அவ்வளவுதான் அடுத்த கணக்கில் தேவியின் பாதத்தினருகே இளஞ்சிவப்புடைய புஷ்பம் ஒன்று கிடந்தது. அந்த புஷ்பத்தின் காம்புகளில் சிறுசிறுமுட்கள் நிறைந்திருந்தன.

அழகான இதழ்கள்தான் ரோஷா. முட்கள் அந்தக் காமப்பித்தர்கள் அன்றைய தினத்திலிருந்து காமுகரான முட்களுடன் அழகி ரோஷா ரோஜாப்பூவாக உலகில் இருந்து வருகிறாள்

(சுதந்திர சங்கு 27-4-'34)

மண்ணில் தெரியுது வானம்

சி. சு. செல்லப்பா

இப்படியும் ஒரு மனிதன் இந்த உலகத்தில் நடமாடினான் என்று ஒரு காலத்தில் மக்கள் நம்பாமல் கேட்டுக்கொள்ளும் நாளும் வரும் என்று தலைசிறந்த விஞ்ஞானி ஈன்ஸ்டின் மதிப்பிட்ட தலைசிறந்த மனிதாபிமானி மகாத்மா காந்தியிடம் நூறாவது பிறந்ததின ஆண்டு இது. இதே ஆண்டிலேயே மகாத்மா காந்தியும் காந்தீயமும் கிழிபடும் நேரத்தில் ஒரு காந்தீய தத்துவ நாவல் தமிழில் வெளியாகி இருப்பது ஒரு ஐரனிதான். ஏன், ஏசுநாதரைப் போல், இம்சையை உலகிலிருந்து ஒழித்து அன்பு வழி கடைப்பிடிக்க உபதேசித்த அந்த அகிம்சா மகாபுருஷனுக்கும் அவரைப் போலவே இம்சை சம்பவித்ததும் ஐரனிதானே!

'மண்ணில் தெரியும் வானம்' என்ற, ந. சிதம்பரசுப்ரமண்யன் நாவலின் கதைச்சுருக்கத்தை முதலில் பார்ப்போம். சிறப்பாக எம்.ஏ. தேறிய, தேசிய மனோபாவம் கொண்ட நடராஜன் சாதாரண அரசாங்க அதிகாரியான ஆங்கிலேய துதிபாடும் தந்தையின் ஒரே மகன். ஐ. சி. எஸ். பரீட்சை தேறி கலெக்டராக வரவேண்டும் என ஆசைப்பட்ட தந்தையின் விருப்பப்படி—தனக்குப் பிடிக்கா விட்டாலும்—நாள் பார்த்து புறப்படுகிறான். ஏறின பஸ்ஸில் கண்டக்டருடன் ஏற்பட்ட விவகாரம் சகுனத் தடையாக அவனுக்குப் பட வீடு திரும்புகிறான். தந்தையின் வற்புறுத்தல் பேரில் மறுபடியும் புறப்பட இருக்கும் சமயம் ஊரில் சட்டமறுப்பு நடந்த கூட்டத்தில் தற்செயலாக கலந்து கொள்ள, எதிர்பாராத விதமாக தடியடிபட்டு காயமடைந்து சிகிச்சைக்குப் பின் கைது செய்யப்படுகிறான்

தந்தையின் புத்திமதிக்கு எதிராக, தன் சுயமரியாதைக்கு பங்கமாக இருக்கும் நன்னடத்தை ஜாமீன் கொடுக்க மறுத்து சிறை செய்யத் துணிய, தந்தை மகனை உதறி விடுகிறார். தன் சிறைக்காலத்தில் தாய் இறந்துவிட, வெளி வந்து ஊர் திரும்பியும் தந்தை முகம் திருப்பிக் கொள்ள தேசத் தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொள்ள சென்னை போகிறான். வாய்ப்பு அவனை ஹிந்துஸ்தான் சேவாதளம் தொண்டர் பயிற்சிக்கு பம்பாயிக்கு அனுப்ப, பயிற்சிக்குப்பின் மகாத்மா காந்தியின் கீழிருந்து பணிபுரியும் பாக்கியம் கிடைக்கிறது. அந்த தொடர்பும் சூழ்நிலையும் அவனுக்கு அவனை பண்படுத்தும் அனுபவமாக அமைகிறது.

மகாத்மா சிறையிடப்படவும் சென்னை திரும்பிய நடராஜன் மறியல் செய்து தடியடிக்கு உள்ளாகி பலத்த காயம் அடைகிறான் சத்யாக்ரக ஆஸ்பத்திரியில் சிகிச்சையின்போது அவனுக்கு பணிவிடை செய்த சரோஜாவிடம் பிரியம் கொண்டு ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப் படவும் அவள் வீட்டில் தங்கி வேலை தேடுகிறான். அவனுடைய சிறை நண்பர்கள் ஆதரவால் புதிதாக ஆரம்பமாகும் பத்திரிகையில் வேலை கிடைக்க, வாழ்வு சரியாகவும், தான் அன்பு கொண்ட சரோஜாவை கலப்பு மணம் செய்து கொள்கிறான் பத்திரிகானுபவம், இலக்கிய அரசியல் நண்பர்கள் சந்திப்பு முதலியவை அவனை பக்குவப்படுத்துகின்றன. அவனுடைய திறமையால் புதிதாக ஆரம்பமான மற்றொரு தினசரி பத்திரிகையின் ஆசிரியப் பதவி கிடைக்கிறது அவனுக்கு பத்திரிகை வளர வளர, காலப்போக்கில் பத்திரிகை ஆரம்பித்த லட்சியம் தேய்ந்து நிர்வாகிகள் கொள்கை நடத்தை மாறுதல் காட்ட, வியாபார நோக்கில் பித்தலாட்டம் செய்யவும் கொள்கை நோக்கில் நியாயத்தைவிட்டு ஆதிக்கத்தில் இருப்பவர்களை ஆதரிக்க பத்திரிகையை உபயோகிக்கவும் முற்படுவதை உணர்கிறான்.

பல ஆண்டுகள் ஆகிவிட்டது. அவன் தந்தையை விட்டு விலக ஏற்பட்ட நாளிலிருந்து. நடுவில் தந்தையை சந்திக்கும் வாய்ப்பு தன் உறவினன் வீட்டில் ஏற்பட்டபோதும் அவனுடைய குழந்தையைக்கூட பார்க்க மறுத்து தன் வைராக்யத்தை கிழவயதுக்கும் சுமந்த தந்தையின் உடல் நிலை சீரியஸாக இருப்பதாக தகவல் வந்ததும் தந்தையின் குணம் அறிந்த அவன் தான் போய் பயனிருக்காது என்று பாசத்தையும் கட்டுப்படுத்திக் கொள்கிறான். தந்தையின் பார்வைக்கும் மதிப்பு கொடுத்துக் கொண்டே, தந்தையின் பார்வைக்கும் நம்பிக்கைக்கும், தன் மனச்சாட்சிக்கும் கடமைக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தில் அவன் தன் மனச்சாட்சியை வைத்து காரியங்கள் செய்திருப்பதாக சமாதானம் அடைகிறான். இரு

தும் தகப்பனுக்கு கடைசி காலத்தில் தான் செய்ய வேண்டிய கடமையையும் செய்ய முடியாமல் போனது துக்கம் தருகிறது. தனனை வெறுத்த தந்தையின் சொத்தை ஏற்க மனச்சாட்சி மறுத்து அதை தரும சொத்தாக ஆக்கி மாணவர்களுக்கு உதவி செய்ய வழி செய்து விடுகிறான்.

பத்திரிகையின் நிர்வாகிகள் ஆசிரிய உரிமையிலும் கைவைக்க முற்பட்டு நடராஜனை கட்டுப்படுத்த முற்படுகிறார்கள். இந்த தலையீடு அவன் மனச்சாட்சியை சோதிக்கிறது. அரசாங்கத்தை குறைகூறி அவன் எழுதிய ஒரு தலையங்கம் பிரச்னையாக ஆகிறது. மனச்சாட்சி வெற்றி பெறுகிறது. வேலை போய் விடுகிறது. இனி—? சரோஜாவுக்கு பரிச்சயமான ராமகிருஷ்ண மடத்தின் சார்பில் நடக்கும் பள்ளிகளில் ஒன்றாக, சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு தொழிலுடன் சேர்ந்த கல்வி முறை பயிற்சி வழியில் ஒரு பள்ளி அமைத்து, நெறி தடுமாறிய சிறுவர்களை பிஞ்சு உள்ளத்திலேயே நேர்மையை வலியுறுத்தி வளரவும் நிறைவான உபயோகமான வாழ்வு வாழச் செய்யவும் பழக்கும் தயாரிக்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். எதிர்காலம் அவர்களைப் போன்றவர்களிடம் தான் இருக்கிறது என்ற குறிக்கோளில். அவர்கள் மகன் மோகன் பள்ளியில் அதிகபட்ச மார்க்குக்காக பரிசு பெறா விட்டாலும் நன்னடைத்தைக்காக பரிசு பெற்று வருகிறபோது, வகுப்பில் எல்லா மாணவர்களும் அவன் பெயரை சிபாரிசு செய்தார்கள் என்று தெரிய வருகிறபோது தன் மகனே தன் குறிக்கோளுக்கு நிருபணமாக இருப்பதிலே ஏற்பட்ட மகிழ்ச்சியில் தன் மனைவியிடம் 'இந்த பரிசு நமக்குத்தான்' என்று கூறி தன் குறிக்கோளின் வெற்றியில் திருப்தி அடைகிறான் நடராஜன். இதுதான் நாவல் உள்ளடக்கியுள்ள கதை.

இந்த நாவலை திறனாய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது நாவலின் கலைத்தன்மை, கதையம்சம், மதிப்பு ஆகிய மூன்று அம்சங்களில் பார்க்கலாம். நாவல் ஒரு உருவப் பொருள் அருவப் பொருள் இல்லை. எழுத்து மூலம் ஜோடிக்கப்பட்டதை முழு மொத்தமான நிகழ்காட்சி சித்திரமாக கண் முன் பார்ப்பதுபோல நினைப்பில் பார்க்க முடிவது. உணரமுடிவது. இப்படிப் பார்க்க, உணர சாத்யமாக்குவது கலையம்சங்களை சரிவர கையாளுதல். இந்த நாவல் தந்தை மகன் என்ற இரண்டு தலைமுறைகளிடையே மாறுபட்ட நோக்கினால் ஏற்பட்ட மோதலில் ஆரம்பித்து, இதில் இரண்டாம் தலைமுறையான மகனுக்கு மூன்றாவது தலைமுறையான அவன் மகனுக்கும் இடையே ஒரு இணங்கிய உறவு தொடரக்கூடும். என்ற சூசனை காட்டும் இசைவில் முடிகிறது. இரண்டு கடைக்கோடி, களம், உறவு மனப்பான்குகளுக்கு இடையே இசையின்மையிலிருந்து இசைவுக்கு வர கதையின் தேற்றம் (புரொகிரஷன்) மென்மையாகவும் படிப்படியாகவும் முடிவில் தெளிவாகவும் சாதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது நாவலின் உருவம் சிதறாமல், பிசிறு தட்டாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இது சாத்யமாக காரணம், நாவலாசிரியர் தன் உத்தேசத்துக்கு ஏற்ப தகவல்களை தேர்ந்தெடுத்து தகவல்களுக்கு ஏற்ப வெளியீடும் காட்டி இருப்பதுதான். லட்சிய மோதல் மட்டும் இல்லை. உறவில் குடும்ப ஒற்றுமைக்கு குலைவும் ஆரம்ப பலாத்காரத்துடன் பிறந்து, நீடிக்கக்கூடிய சவுஜன்ய உறவுக்கும் சூசனை உணர்த்துகிறது. இந்த இரண்டு நிலைக்கும் நடுமத்தி நாயகனாக உள்ள நடராஜன் இந்த இடைக்காலத்தில் உருவாகி இருப்பதே கதையில் நடந்திருப்பது. துடியான வாலிபன் என்று சொல்ல இடம் இல்லா விட்டாலும் முற்போக்கான, லேசான உணர்ச்சி வசப்பட்டவனான நடராஜன் உணர்ச்சி அடங்க அறிவு மனப்பக்குவம் மேலெழுந்த ஒரு ஆளுமையாக முதிர்ந்திருப்பது எந்த விதமான சிறு உரசல் விரிசல் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நாவல் தத்துவ நாவல் (பிலஸாபிகல்) ஆனால் நீதி போதகமானது (:டை:டாக்டிக்) இல்லை. அயர்லாந்து கவி யேட்ஸ் கருத்து இங்கே குறிப்பிடத்தக்கது. கவிதைக்குச் சொல்லி இருப்பதானாலும் நாவலுக்கும் பொருந்தும். பொதுக் கருத்து தத்துவம் கவிதைக்குள் துண்டுகளாக வரலாம். ஆனால் அவை உணர்ச்சிகளை ஒருவித அறிவு பூர்வமாக பிரதிபலிக்கச் செய்வதாக இருக்கும் என்ற கருத்து. சிதம்பர சுப்ரமண்யன் சாதனை இந்த அம்சத்தில் சிறப்பாக இருக்கிறது. பி. ஆர். ராஜம் அய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம்' க. நா. சுப்ரமண்யத்தின் "பொய்த்தேவு" இவற்றைப் போல். நடராஜன் மனவோட்டமும் செயலும் சென்டிமெண்டலாக அதாவது அசட்டு அபிமான உணர்ச்சியாக போய் விடாமலும் தத்துவ விசாரமாக வறட்டு நீதி ஒழுக்க சிந்தனையாக இல்லாமலும் இரண்டும் சுத்தப்படுத்தப்பட்டு இணைந்த ஒரு மன நிலைக்காரனுடையதாக இருக்கிறது.

இந்த நாவலில் நடராஜன் ஒருவன்தான் நம்மை கவனிக்கச் செய்கிற பாத்திரம். கதையின் சொல்முறை உத்தி 'நான்' என்ற பாங்கில் அமைந்து இருப்பது இந்த முழு கவனம் ஏற்படச் செய்யத்தானே. இந்த நாவலில் தந்தை முதல் மகாத்மா காந்தி வரை, அறிவாளி தி. ஜ முதல் தியாகி தல்லதம்பி வரை மகன் மோகன் முதல் அனாதை கோவிந்து வரை யாரையும் நடராஜன் சந்திக்கும்போது சம்பவம். உணர்ச்சி ரீதியாக இருந்தாலும் அறிவு ரீதியாக பரிகாரம் காணும் சர்ச்சைகளுக்கு இடம் ஏற்பட்டு ஏற்கெனவே சிறையில் சித்தாந்தங்களை தெரிந்து கொள்ள ஆரம்பித்தவனுக்கு இன்னும் பயன் ஏற்பட்டது. தத்துவமும் கதையும் அளவறிந்து பின்னப்பட்டு,

இருப்பதால் நாவல் சமநிறை வாய்ந்து இருக்கிறது.

ஒரு நாவலின் கலைத்தன்மைக்குப் பயன்படும் உத்திகள் சிறிதும் பெரிதுமாக பல உண்டு. முதலாவது வர்ணித்தல். ஆடம்பரமற்ற எளிய நடையில் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது ஒரு அளவோடு. இந்த நாவலில் அகவோட்டம்தான் ஜீவனி எனவே அது சம்பந்தமான தகவல்களில்தான், விவகாரமான விசாரணையில்தான் ஆசிரியர் முதல் கவனம் ஏன் முதன்மையான கவனம் செலுத்தி இருக்கிறார் புறசம்பந்தமான இடம், உருவம், நிகழ்ச்சிகள் பற்றிய காட்சி ரீதியான வர்ணனைகளைப் பற்றி அக்கறையே இல்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் தன் உத்தேசத்துக்கு அது இரண்டாம் பட்சம் என்று கருதி இருப்பது தெரிகிறது கொஞ்சம் விவரம் கூடுதலாகத் தரப்பட்டு அதிகமாகச் சித்தரிப்பு பெற்றிருக்கலாம். கதைக்கு இன்னும் போஷாக்கு கொடுத்திருக்கும் என்று நான் நினைக்கும் சத்யாக்ரகம், சிறைவாசம் போன்றவைகூட நடராஜனின் சித்தாந்த பக்குவத்துக்கு உதவும் அளவுக்கே தரப்பட்டிருக்கின்றன.

ஆனால் எந்தக் காட்சி சித்தரிப்பில் கொஞ்சம் நிதானம் நாவலில் காண்கிறதோ அதுக்கு ஈடுகட்டி கருத்துச் சித்தரிப்பு சம்பாஷணையில் உயர்ந்தபட்சத்தில் இருக்கிறது. படிக்கும்போது தான் இதை உணர முடியும். 'நான்' நடராஜனை துருத்தி நிறுத்தி அவனை லக்ஷிய கதாபாத்திரமாக காட்டுவதுக்காக, அவனோடு உறவு கொள்பவர்களுடன் பேசும்போது இவனது உயர்தரமானதாகவும் மற்றவரது தணிந்தரமானதாகவும் செய்யப்படவில்லை. கவிதா நியாயம் (பொயடிக் ஜஸ்டிஸ்) என்கிற வெகுமதியும் தண்டனையும் நியாயமாக தரப்பட வேண்டும் என்ற போக்கிலும், ஒருவழிப் போக்கானதாக இல்லாமலும் இரு தரப்புக்கும் சத்தான கருத்துகள் கொடுத்து பிரச்னைகளின் இருபக்கமும் சமமாக மோதும்படியாக செய்யப்பட்டிருக்கிறது வீ. ரா வுக்கும் நடராஜனுக்கும் நடந்த சம்பாஷணை போன்றவைகள் உதாரணம்.

உணர்ச்சிகரமான சம்பாஷணை கு. ப. ராஜகோபாலன் எழுத்துக்களில் இருக்கும் அறிவு பூர்வமான நிலைப்போட்டம் க. நா. சுப்ரமண்யம் எழுத்துக்களில் இருக்கும். உணர்ச்சிகரமான நிலைப்போட்டம் பி.எஸ் ராமையா எழுத்தில் இருக்கும், தத்துவக் கருத்து குறிப்புரை பிச்சமூர்த்தியிடம் பார்க்க முடியும். தத்துவகரமான சம்பாஷணை இந்த நாவலின் இருக்கிறது சிறப்பாக.

இந்த நாவலில் இன்னொரு அம்சமும் குறிப்பிடத் தக்கது சம்பவங்கள் (இன்ஸிடெண்ட், அனெக்டோட்) அடுக்கினதுபோல நிறைய வருகிறது. சில கதாபாத்திரம் நடராஜன் நேர் சம்பந்தப்பட்டது சில, மற்றவர்களைப் பற்றி நடராஜனுக்குத் தெரியவந்தது. எப்படி நடராஜனோடு உறவு கொள்பவர்கள் அவன் தத்துவ வாழ்வு அவனுக்கு பாதிக்கிறார்களோ அதுபோல இந்த சம்பவங்களும் அதே காரியத்துக்கு பயன்படுகின்றன. தனித் தனி மணிகளாக இருப்பவை கோர்த்ததும் மாலையாக உருவம் பெற்று பயன்படுவதுபோல நடராஜனுக்குள் அவை அடைந்து அவனை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதெல்லாம் கனரீதியாக ஆக்க குணங்கள். எனவே இந்த நாவல் அங்கக்கட்டாக (ஆர்கானிக்) அமைந்திருக்கிறது. ஆனாலும் இரண்டு அத்தியாயப் பேச்சுகள் கொஞ்சம் கதையின் பிகுவைத் தளர்த்துகின்றன. அதே போல கதையின் முடிவான, நன்னடத்தைக்காக மகன் பரிசு பெறும்போது தந்தை திருப்திப்படும் இடத்தில் இன்னும் கொஞ்சம் 'டிராமாடிக்பவர்' ஏற்றியிருக்கலாம் என்று படுகிறது என் நாக்கு ருசியை வைத்துச் சொல்கிறேன். நாவலாசிரியர் நாக்குக்கோ வேறு வாசக நாக்குக்கோ உள்ள உரிமையும் எனக்கு நினைவிருக்கிறது.

அடுத்தபடி கதையம்சம்: கதையைத்தான் நான் சுருக்கம் தந்துவிட்டேனே கலையம்சம் பற்றிச் சொல்லும்போதும் கலந்திருக்கிறேன். இருந்தாலும் சொன்னது தூலக் கதைதானே. ஒரு நாள் காலை ஆரம்பிக்கிறது. கதை ஒரு நாட்டுப் பக்க சிறு டவுனில் 1930ல். அங்கே இருந்து சென்னைக்கு நகர்ந்து பம்பாய்க்குப் போய் மறுபடி சென்னை திரும்பி கால் நூற்றாண்டுக்கு மேல் ஆகிறது பிரம்மச்சாரியாக ஆரம்பித்து குடும்பஸ்தனாக—ஒரு பையன் உள்பட— ஆகியுள்ள கட்டம், காந்தி சட்ட மறுப்பில் ஆரம்பித்து காந்தியக் கல்வி வழி நிர்மாணத் திட்ட அமுலில் வந்து நிற்கிறது. இதுக்கெல்லாம் மேலாக வாழ்க்கையைப் பற்றிய ஒரு பார்வை, பொறுப்பு உணராத ஒரு லட்சியக் குறிப்பு ஏற்படாத நிலையிலிருந்தும் ஓரளவு அறிவு முதிர்ந்த, பொறுப்பு உணர்ந்த, மனித சக்தியில் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்த நிலையில் வந்து நிற்கிறது. நாவல் ஒரு நம்பிக்கை தெளிவுடன் முடிகிறது. இதெல்லாம் சாத்தியமாக நாவல் ஒருமிப்பு பெற நடுவே அமைக்கப்பட்ட மனப்போராட்ட கட்டங்கள். அதாவது தந்தையோடு வேறுபாடு, சிறையில் அவதி, கலப்பு மணம் செய்வதில் சிக்கல்கள், உத்தியோகத்தில் தகராறு, அவ்வப்போதைய உலக நிலை விசாரங்கள் இத்யாதி கதையில் கட்டங்களாக நின்று கதையம்சம் ஏற்றுகின்றன. இவை ஒன்றுக்கொன்று ஈடுகொடுத்து உதவி கதையை முன் நடத்துகின்றன.

கதைக்கு வெளியே இருப்பது கதைக்கான விஷயம் (சப்ஜெக்ட் மாட்டர்) கதைக்கு உள்ளே இருப்பது கதையம்சம் கதைக் கரு. (பிளாட், தீம்) கதைக்கான விஷயம் மூலப் பொருள். கதையம்சம் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள் கதைக்குள் மேலே

சொன்ன கட்டங்கள் இழைந்து இணைந்து கலந்து உட்புறமாக் அதாவது நாவலின் உள் வடிவமாக அமையும். ஒன்றுக்கொன்று பொருந்தி கதை விவரணங்களால் ஒரு நெசவுப்பொருளாக அமையும், இந்த நெசவு சம்பவமும் கதையுமாக உணர்ச்சியும் அனுபவமுமாக, தத்துவமும் சிந்தனையுமாக, ஊடும் பாவுமாக கலவையாக்கப் பட்டிருக்கிறது. நடராஜன் கைதாவதிலிருந்து அவன் பத்திரிகையில் உத்தியோகம் பெறும் வரை டிராமாடிக் நிகழ்ச்சிகளாக கதை உருவாகி வளர்கிறது. அதுக்குப் பின் கருத்துக்களாக கதை வளர்கிறது. பிறகு நிகழ்ச்சிகள் வந்தாலும் முன்போல அதே டிக்ரி டிராமாடிக் நிகழ்ச்சிகளாக இல்லை ஆனாலும் ஓரளவு டிராமாடிப் தன்மை வாய்ந்தவைதான். உதாரணமாக பத்திரிகை ஆபீசில் நடப்பவைகள்.

இருந்தாலும் இந்த நாவலில் உள்ள சம்பவங்கள், மோதல்கள், இத்யாதிகளை அத்தனையும் சேர்ந்தும் இந்த நாவல் கதையப்சத்தில் மெலிந்ததுதான். சிம்பிள் என்கிற எளிய வீச்சு. 'காம்ப்ளக்ஸ்' என்ற கூட்டுக் கலப்பான சிக்கலான பிரச்னைகளை அடக்கியுள்ள ஒரு விஸ்தாரம் இல்லை. விரிவு இருப்பது ஒரு வகை நாவல். ஆழம் இருப்பது இன்னொரு வகை நாவல். இந்த நாவலில் ஆழம் இருக்கிறது. தத்துவம் அந்த ஆழத்தை தருகிறது

மூன்றுவதாக மதிப்பு (வேல்யூ) பற்றி கதை இல்லாமல் எப்படி ஒரு நாவல இருக்க முடியாதோ அதுபோல தத்துவம் இல்லாமலும் இருக்க முடியாது. கவி யேட்ஸ் கூறி இருப்பதை முன்பு குறிப்பிட்டிருக்கிறேன், தத்துவம் பொதுப்படையானது. நாவலில் ஒரு குறிப்பிட்ட மதிப்பாக அடையாளம்பெறும். மதிப்பு என்பது ஒரு பொருளுக்கு உரிய இயல்பான யோக்யதை கொண்டது. அதன் பெறுமானத்தை, குணத்தை, தன்மையை, பயனை அறிந்ததாக அடையாளம் கண்டு பிடிக்க முடிவது ஆன்மீக மதிப்பு, சமூக மதிப்பு, மனோதத்துவ மதிப்பு என மூன்று மூத்த மதிப்புகள். சரித்திர மதிப்பு, அரசியல் மதிப்பு, பொருளாதார மதிப்பு, கலாசார மதிப்பு என்று இளைய மதிப்புகள்.

இந்த நாவலில் மூன்று மதிப்புகளும் விளக்கம் பெற்றிருக்கின்றன. தூக்கலாக நிற்பது ஆன்மிக மதிப்புதான் இந்த நாவல் சுதந்திர இயக்க காலத்தை காந்திய சகாப்தத்தை, அகிம்சா போராட்டகளத்தை தன் பின்னணியாக கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அரசியல் ரீதியாக விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக அழுத்தம் குறிக்கோளாக கொள்ளப் படவில்லை, எந்த ஒரு காலம், களம், பிரச்னை இருந்தாலும் படைப்பாளி தன் பார்வையில் எந்த கோணத்தில் அதன் சத்தை (எஸன்ஸ்) எடுக்கப் பார்க்கிறான், உணர்த்தப் பார்க்கிறான் என்பதைப் பொறுத்தது இந்த மதிப்பு விஷயம். நடராஜன் சுதந்திரப் போராட்டத்தில் முழுக்க ஈடுபட்டவன் இல்லை. 'ஆத்மாவின் ராகங்கள்'. நாவல் (நா. பார்த்தசாரதி) கதாநாயகன் ராஜாராமன் போல, இருமுறை தடியடி ஒரு தடவை சிறைவாசம் இதோடு, முப்பதுக்கள் கால இயக்கத்தோடு அவன் நேரடி அரசியல் ஈடுபாடு நின்று விடுகிறது. இங்கே அவனை பரிபூரண தியாகியான. ஒரு ஆளுமைக்காரனாக பாாக்க வைக்கவில்லை. காந்தியதத்துவம்-வழிமுறை அதில் ஈடுபாடு, அதனால் ஒரு தனி மனிதனுக்கு (இண்டிவிஜுவல்) ஏற்படும் பாதிப்புகள். அவன் உருவானது இதுதான் நோக்கம். நாட்டு விடுதலை, சமூக வளர்ச்சி இரண்டுக்கும் மேலாக ஒருவன் எப்படி அதிகபட்ச நிறைவானவனாக ஆகச்செய்தது காந்திய தத்துவம், களம் என்பதுதான் நாவலாசிரியன் உத்தேசம் (இன்டென்ஷன்) இந்த உத்தேசம் அதில் சரியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டுமே என்று தவிர தன் உத்தேசங்கள் அங்கு காணவில்லையே என்று முன் கூட்டிய முடிவில் எதிர்பார்த்து ஏமாந்து, படைப்புமீது சீறி விழக்கூடாது, உரிமையும் இல்லை. ஒரு பிரச்னையில், ஒரு அனுபவத்தில் எந்த பயன் அம்சம் முக்கியமானது சத்தானது, அடிப்படையானது என்று ஒரு படைப்பாளி கருதுகிறானோ அதுதான் மதிப்பு. அவன் எழுத்தில் அது தொனிக்கும். நாம் அனுமானிக்கவும் நிதானிக்கவும் முற்படவேண்டும்

ஆன்மிக மதிப்பை அதிகம் வலியுறுத்தும் நாவல் என்று சொன்னேன். ஆன்மிகம் என்றால் நடப்பு வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி பற்றற்ற துறவித் தத்துவ நோக்கு இல்லை. தன் வாழ்வுப் பின்னணியில், தன் நடைமுறைச் சூழ்நிலையில் தீமையை (ஈவில்) எதிர்த்துப் போராடும் மனதாபிமான குணம் அமைந்த ஒரு நோக்கு. நாவலில் கதாபாத்திரங்கள் பல விஷயங்களை விவாதிப்பதும் சரி. எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் ஏராளமான மேற்கோள்களிலிருந்தும் சரி. ஒருவன் பார்க்க முடியும். ஒரு குறை நீங்கிய குணவானாக ஆக நடராஜன் எவ்வளவு முயற்சிக்கிறான், போராடுகிறான என்பது. தனி மனிதன்தான் சமூகத்துக்கு ஆணிவேர் அவன் பண்பட்டால்தான் சமூகம் பணபடும், சமுதாயம் பண்படும், மனிதஜாதியே பண்படும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது காந்தீய வழியில்.

தர்மம் வீட்டில்தான் ஆரம்பிக்கிறது என்பதுபோல மனிதாபிமானம் தனி மனிதனுக்குள்தான் பிறக்கிறது நடராஜன் ஒரு மனிதாபிமானி காந்தி, காந்தீயத்தால் உருவான ஒரு ஆளுமை தன் கடமைக்கும் அன்புக்கும் பாசத்துக்கும் உரிய தந்தையோடு மனச்சாட்சிப் போர். தன் சுயதர்மத்துக்கும், சீர்திருத்த பார்வைக்கும் நடுவே மனச்சாட்சிப் போர்,

தன் பிழைப்புக்கும் நியாய உணர்ச்சிக்கும் நடு வேயும் அதேபோல இந்த பரீட்சைகளில் தேறுகிறான். அதிகவில்லை கொடுத்துத்தான். இந்த மதிப்புகள் நாவலாசிரியரால் சுமத்தப் படாமல் கதாபாத்திரங்களின், நினைப்பு, பேச்சு செயல்களிலிருந்து சாதவாக எழுகிறது அனுபவத்திலிருந்து கலைத்திறனும் குறைவான ஒரு கையில் இந்த நாவல் ':டை:டாக்டிக்' ஆக ஆகி இருக்கக்கூடும்.

முடிக்குமுன் சில குறைகள்பற்றி. வேதா ரண்யத்தில் உப்புக் காய்ச்சுவது இல்லை. அள்ளு வதுதான தகவல் பிசகு. கதைக்கு இடையூறு இல்லை மேற்கோள்கள் ஒரு மொழியில் மட்டும் இருந்திருக்கலாம். தனக்கு பணிவிடை செய்யும் தான் மணக்க இருக்கும் பெண்ணைப்பற்றி சொல்லும்போது 'தாயைப் போல' என்ற உப மானம் தவிர்க்கப்பட்டிருக் கலாம் இரு தடவை அடிபட்ட நிகழ்ச்சி வர்ணனை பேதம் காட்ட சித்தரித்திருக்கலாம் காதல் விஷய சம்பாஷணை கள் நினைப்புகள் மட்டும் சாதாரணமானதாக (ஹேர்னீடு) இருக்கிறது.

இந்த நாவல் கதாசம்பவ ஆரம்பம் ஏதோ ஒருநாள் விடியற்காலை, கதாசம்பவ முடிவு ஏதோ ஒருநாள் இரவு காலை முதல் இரவு வரை யில்—மனிதனது தினசரிகாரியக் கால அளவு அதேபோல நடராஜன் வாழ்வில் ஒருபகுதிக் கால அளவுக்குள் நடந்ததை கூடார்த்தமாக(சிம் பாலிக்) இந்த காலை—இரவு பிரஸ்தாபம் தெரி விக்கிறதோ?

'வானகத்தை இவ்வுலகத்திலிருந்து தீண் டும் வகை உணர்த்தி' 'மண்ணிலும் வானம் தானே நிரம்பி இருக்கிறது.' வானகம் இங்கு தென்படவேண்டும் என்று தீர்க்கதரிசன பாரதி பாடினான். ஆதர்ச புருஷன் மகாத்மா காந்தி அதை இங்கே வாழ்ந்து காட்டினான். அந்த கருப்பொருள் கொண்ட இந்த நாவலை உங்களுக்கு சிபார்சு செய்கிறேன்.

மண்ணில் தெரியுது வானம்.

நாவல் ஆசிரியர்: ந. சிதம்பர சுப்ரமண்யன்

வாசகர் வட்டம் சென்னை: 17.

விலை ரூபாய்: 7-50.

[சென்னை கிறிஸ்தவ இலக்கிய சங்கம் சார்பில் 'நண்பர் வட்டம்' ஆதரவில் 13-12-69ல் நடைபெற்ற கருத்தரங்கில் படிக் கப்பட்டது]

ஞானம்

ஹரி சீனிவாசன்

ஜேப்படித் திருடன்
ஜேபியில் கைபோட்டால்
என்ன கிடைக்கும்?
ஆராரோ இழுபறி செய்து
பொறுக்கிச் சேர்த்த
பைசாக்கள்!
என் கை விரல்!

உபதேசம்

நக்கீரன் இளம்பூரணன் திருவள்ளுவன்
சுச்ருதன் அத்ரி பிருகு ஆங்கீரசன் விச்வா
மித்திரன் வசிஷ்டாதி முனிவர் போல்
தேர்வீதி நெற்றியும் திகழும்சந்
தனப்பொட்டும்
நீள்முகமும், காலக்கணக்கனது
கேள்விக் குறியான நெடுமூக்கும்
அகண்ட கங்கையோடு ஆறு கலப்
பதுவாய்
அலையோடும் தாடிமேல் விழுமீசை
அருவியும்
தில்லை நடராசன்போல் திறந்துவிட்ட
மார்பும்
புதர்மீசைக் குள்ளிருந்து,
புர்க்கரப் போட்டு நெஞ்சை
அதிர்விக்கும் பீவிபோல அழகாடும்
உதடுகளும்
தன்னை மறந்துவிடச் செய்யும் கைகாலும்
குறடுமாக
வந்தார்
அவர்
சாமியே சரணமென்றேன்
சாஷ்டாங்கமானேன்
உபதேசம் செய்யுமென்றேன்
"பழஞ்சோறு ஒரு பிடி
இருந்தாற் போடும்
பழங்கந்தை ஒரு முழம்
இருந்தாற் கொடும்"
என்றார்.

கவிதைகள்

சாராயக் குளியல்

சு. குருசாமி

1. சிறகுகள் மடித்துச்
சிரசை நெஞ்சுள்
அழுத்தி யிருந்த
சிந்தனைப் பறவைகள்
காட்சி, கல் எறிந்ததால்
ககன வெளியெலாம்
அலைந்து சலித்தன

2. ப்ளக்—
விழுந்த கார்க்கைத்
தொடர்ந்து
விழுந்து
சொட்டுச் சொட்டிய
திராட்சையின் ரத்தம்
தாங்கும் கிண்ணம்

3. சிந்தனைக் காக்கைகள்
சிலிர்த்து நிமிர்ந்தன
ததும்பிடும் கோப்பைத்
தடாகம் அமிழ்ந்தன
தலையை
இப்படி அப்படி
உதறின

4. சிறகுகள் மடித்துச்
சிரசை நெஞ்சுள்
ஆழ்ந்து புதைத்து
ஆழ்ந்து
உறங்கின.

நன்றி: The New College Magazine 1969.

நிலவு

டி. ஆர். நடராஜன்

வாயுத் துச்சாதனன்
இழுத்த வேகத்தில்
மேகப்புடவை
நெகிழ்ந்தது.

அப்பெல்லோ யுகத்தில்
'கண்ணு' எனக்
கதறுது நிற்கும்
பாஞ்சாலி

பயன்

தி. சோ. வேணுகோபாலன்

விவசாயத்துக்கு
மோட்டார்—பம்பு எதற்கு?
தண்ணீரின் 'சத்தை'
உறிஞ்சித் தொலைத்துவிடும்;
தெரியாமல் தொட்டால்
'ஷாக்' அடித்துத் தொலைக்கும்;
சோம்பலை வளர்க்கும்.

ஏற்றக் கிணறுண்டு;
இறைக்கச் 'சால்' உண்டு,
காலில் 'வலு' இருக்கு;
கைக்கோலும் நீண்டிருக்கு;
உடம்புக்கு நல்லது
உல்லாசமாய்ப் பாட
தெம்மாங்குப் பாட்டிருக்கு;
கஞ்சிக் கலயத்தை
பொஞ்சாதி தூக்கிவரும்
நடையழகைப் பார்க்க
நல்லதொரு வாய்ப்பிருக்கு
....
பம்பு துருப்பிடிக்கிறது.

நாகரிகம்

விண்வெளிக் கப்பலில்
வெகுதூரம் சென்றேன்;
காலை வலித்தது.
ஓய்வெடுக்க வேண்டி
கிராமத்தில்
என் வீட்டுக்கு வந்தால்
அடையாளம் தெரியவில்லை!

காலம்

பா. ரவிகுமாரன்

பாறைகள்
உருண்டு
சிதையச்
சிதைய—
பெரும் கற்கள்
சிறு கற்கள்
மணல்
மண்—
வண்டல்
என் கால்களில்;
தெருப்புழுதி
என் கண்களில்.

காந்தியுக நாவல்கள்

நேற்றைய அரசியல் இன்றைய சரித்திரமாகிறது. அதன்படி சுதந்திரம்பெற்ற 1947-க்கு முந்திய கால் நூற்றாண்டு, அதாவது காந்திஜியின் முழு ஆதிக்கம்பெற்ற இயக்க காலம், இன்றைக்கு, அதுவும் சுதந்திரம் பெற்று கால் நூற்றாண்டு பூர்த்தி நெருங்கிக்கொண்டிருக்கிற நேரத்தில் சுவையான சரித்திரத்தை உள்ளடக்கிய பகுதியாகும் அந்தச் சரித்திரம் நம்முடைய பள்ளிகளின் பாடநூல்களிலும் முழுமையாக ஏறவில்லை. இலக்கிய ஏடுகளிலும் பதியவில்லை. இரு துறைகளிலும் வாளை உருவிய தீரச் செயல்களையே பக்கம் பக்கமாக நிரப்பி மகிழ்ந்து கொண்டிருக்கிறோமே தவிர, வாள் இல்லாத புரட்சியின் அம்சங்களைப்பற்றி யாருக்கும் அக்கறை ஏற்படக் காணோம்

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் இந்தக் குறை நீங்குவதற்கு மூன்று நாவல்கள் துணைபுரிந்து, காந்தி நூற்றாண்டு விழா ஆண்டை ஓரளவு பொருள் பொதிந்ததாக மாற்றி இருக்கின்றன நா. பார்த்தசாரதியின் ''ஆத்மாவின் ராகங்கள்'' ந. சிதம்பரசுப்பிரமணியனின் ''மண்ணில் தெரியுது வானம்'', ராஜம் கிருஷ்ணனின் ''வளைக்கரம்'' மூன்றும், தேசியத்தை இடையிடையே தூவி, வேறு வழக்கமான சங்கதிகளை வைத்துப் பின்னிய ஏமாற்றுச் சரக்குகளாக இல்லாமல், அப்பட்டமான சுதந்திர இயக்க நாவல்களாக வெளிவந்திருப்பதை நல்ல ஆரம்பமாகக் கொண்டு பெருமைப்படலாம்.

நவம்பர் மாதம் முதல் தேதியன்று, படைப்பாளர் அரங்கு ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் மேற்படி மூன்று நாவல்களையும்பற்றிய விமர்சன உரை ஒன்றை சி. சு. செல்லப்பா நிகழ்த்தினார். தனித்தனியாகவும், ஒப்பிட்டும் அவர் வெளியிட்ட கருத்துக்களில், இம்மாதிரி நாவல்களை அணுக வேண்டிய முறைபற்றி தெளிவாக வலியுறுத்தியதை முக்கியமாகக் கொள்ள வேண்டும். நாவலின் அமைப்பு, உள்ளடக்கம் இரண்டையும் கலந்து முழுமையாகப் பார்க்க வேண்டும். இருந்தாலும் அமைப்பு முக்கியம் என்பது துவக்கத்திலேயே வெளியிடப்பட்ட சூத்திரமாக அமைந்தது,

மற்ற இரண்டு நாவல்களிலிருந்து 'வளைக்கரம்' மாறுபடுகிற அம்சங்களையும் செல்லப்பா முதலிலேயே எடுத்துச் சொல்ல தவறவில்லை. வருஷ ரீதியாகவும், கருத்து ரீதியாகவும் மூன்றுமே காந்தீய நாவல்கள் என்றாலும் முன்னவை இரண்டும் தமிழ்நாட்டுக் களத்தில் இயங்குபவை, 'வளைக்கரம்' கோவாவைப் பின்னணியாகக் கொண்டது. முன்னவை இரண்டிலும் அஹிம்சை மட்டுமே இழையோட, மூன்றாவதில ஹிம்சை, அஹிம்சை இரண்டையும் காணலாம். காந்தியப் போர் முறையின் அம்சங்களை சரியானபடி மனதில் பதியவைத்துக்கொண்டு மூன்று ஆசிரியர்களும் தங்கள் படைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள், மூன்றிலும் வடிவம் சரியாக விழுந்திருக்கிறது.

இம் மாதிரியான வரலாற்று நாவல்களின் பிரச்னைகளும், சிக்கல்களும் சரியானபடி தேர்ந்தெடுக்கப்பட்டு படைப்புலன் உருவாக்கப்பட வேண்டும், என்றும், அப்பட்ட உண்மைகளை மட்டுமின்றி, வரலாறு தழுவிய உண்மைகளையும் இணைப்பது அவசியமாகிறது என்றும் விளக்கிய செல்லப்பா, நாவலின் கதையோட்டத்தைப் பாதிக்கிற விவரணத்தன்மை (documentation) எந்த அளவுக்கு அனுமதிக்கப்படலாம் என்பதுபற்றியும் விவரித்தார். எந்தச் சாதாரண நாவலிலுமே இடத்தையோ, அழகையோ வர்ணிக்காமல் விடுவதில்லை, அந்த அளவுக்கு அது 'அனுவசிய அத்துமீறல்' தானே கதைக்கு உபயோகம் இல்லாமல், தனியாகத் தொங்குகிற, விடுபட்டுத் தொனிக்கிற விவரணங்கள் தான் தவிர்க்கப்பட வேண்டியவை. இந்த அம்சமே ஒரு நாவலை சிறுகதையிலிருந்து தனித்துப் பிரிக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. முழு நீள வர்ணனைகள் சிறுகதையில் அறவே தவிர்க்கப்பட வேண்டியவை ஆகின்றன. சாவகாசமாக எழுப்பப்படுகிற பிரமைகளுக்கு சிறுகதையில் இடமே இல்லை

அடுத்தது, 'யதார்த்தம்' பற்றிய வாதம். நமக்கெல்லாம், 'யதார்த்தம்' என்றாலே, நிறைவேறாமையும் ஏக்கமும், வழுக்கலும் இன்னபிற துன்பியல், பண்புகளின் தாக்கலும்தான். செல்லப்பா சொன்னபடி, 'சோதனையில் விழுவது மட்டும் யதார்த்தம் அல்ல, லட்சியத்தை அடைவதும் யதார்த்தம்தான்'. நீண்டு கொண்டேபோன போராட்டத்திற்குப் பிறகு சுதந்திரத்தைப் பெற்றவர்கள்தானே நாம், சுதந்திரம் பெற்ற சூட்டிலேயே, போராட்ட நாயகனைப் பறிகொடுத்தோமே, அதுவே நல்ல நாடகமயமான யதார்த்தம் தானே? காந்தியுகப் பிரச்னைகளினே, அவற்றைத் தீர்க்கும் லட்சிய வெறியிலே, சாத்தியமானது என்கிற எல்லைக் கோடே கிடையாது ஆங்காங்கு நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை இன்று படித்துப் பார்த்தாலே, நாவல்களைவிட அதிக பிரமிப்பு தட்டும்

'உணர்ச்சிமயமான மோதல்களுக்கு அறிவுபூர்வமான அணுகல் என்கிற சொற்றொடரை செல்லப்பா உபயோகித்ததைப் பலவிதமாக நமக்குள் விளங்கிக்கொள்ள வேண்டும். காந்தியுகப் போராட்ட வாதிகள் சாமான்ய மக்களே. பொதுவான ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டவர்களே. காந்திஜி நடத்தியதோ சித்தாந்தப் போராட்டம் இலட்சணையோ வர்க்கப்

போராட்டமோ அல்ல வர்க்கப் போராட்டத்துக்கு சித்தாந்த அடிப்படை காட்டி வாதாட முற்படலாம், போராட்ட முறையில் சித்தாந்த ரீதியில் இயக்கத்தை திருப்பிவிட்ட புதுமை காந்திஜியுடையது. இலக்கிய முயற்சிகளை அணுகும் முறைக்காக இயக்கம் பற்றிய நீண்ட தூரம் செல்ல வேண்டியதாகிறது பெருமாள் கோவில் சிவன் கோவில், காளி கோவில் இவைகளின் வழிபாட்டு முறையே வேறு என்று செல்லப்பா குறிப்பிட்டது சுவையாயிருப்பது மட்டுமின்றி, அணுகும் முறைக்கு நியதிகற்பிப்பதையும் உணர்த்துகிறது. பல நூறு பக்கங்களைப் படித்துவிட்டு, சர்க்கரைச் செட்டியார் பெயரைக் காணோமே என்று அங்கலாய்த்தால், சிரிப்புதான் மிஞ்சும்!

தனிமனித வளர்ச்சியைக் காட்டும் நிறைவான பாத்திரம் நடராஜன் (ம. தெ வானம்) என்ற செல்லப்பா, நடராஜனைவிட ராஜாராமன் (ஆ. ரா.) காந்தியவாதி என்றார். காரணம் நடராஜன் ஒரிருசமயங்களில் தன் பாதையைப் பற்றியே சற்று 'நொந்து' கொள்வதாகப்படுகிறது. ஆனால், அவன் லட்சியத்தில் தோற்றவன் இல்லை. 'மண்ணில் தெரியுது வானம்' 'பொய்த்தேவு' வழி நாவல் என்றும், அந்த நாவலில் வருவதுபோன்ற அறிவு பூர்வமான சம்பாஷணைகள் இதுவரை எந்த நாவலிலும் வரவில்லை என்றும் குறிப்பிட்ட செல்லப்பா, காதல் விஷயத்தில் ராஜாராமனைப் போல நடராஜன் பிகுவாக இருக்கத் தவறிவிட்டான் என்றும் தெரிவித்தார். 'ஆத்மாவின் ராகங்கள்' நாவலில் காண்டேகர் பாணி வர்ணனைகள் சில இடங்களில் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை 'வளைக்கரம்' நாவலில்' சத்யாக்ரகக் காட்சிகள் சித்ரிக்கப்பட்டிருப்பது வெற்றிகரமாக அமைந்திருப்பதாகவும் வர்ணனைகள் தூக்கி நிற்பதாகவும் குறிபிட்டார். எனினும் விரதத்தில் ராஜாராமனும் மதுரமும் வென்றதற்கு மாறாக, ஈசான் (வளைக்கரம்) விழுந்துவிட்டான் என்பதையும் எடுத்துக் காட்டினார்.

மூன்று நாவல்களிலும் கடைசிவரை சரிவோ தொய்வோ இல்லை என்றும், மூன்றிலும் 'கலப்பு உறவு' இடம் வகிப்பதாகவும் செல்லப்பா கூறினார் நாவல்களில் காணும் சில்லறைத் தகவல் குறைபாடுகளையும் அவர் எடுத்துக் கூறியபோது, சிறு விஷயங்களில் ஜாக்ரதையாக இருக்க வேண்டியதின் அவசியம் புலனாகிறது இந்த நாவல்கள் 'பிராந்திய நாவல்கள்' அல்ல என்று அவர் கூறியது கவனிக்கத் தக்கது களத்தைவிட காரியம் முக்கியம் இத்தகைய நாவல்களின் பாத்திரங்களுக்கு. கோவாவில் களம் அமைந்ததால் 'வளைக்கரம்' பற்றியும் இந்த விஷயத்தில் நாம் ஏமாந்துவிடக் கூடாது.

செல்லப்பா உரையின் இறுதிப் பகுதி முன்பே எழுப்பப்பட்ட சில கருத்துக்களுக்குப் பதில் சொல்வதில் கவனம் செலுத்தியது ஒன்று 'மண்ணில் தெரியுது வானம்' பற்றியது. மற்றது பொதுவாக காந்தீயம் பற்றியது.

சிதம்பரசுப்ரமண்யன் நாவலை அப்படியே சுருக்கி இருக்கலாம் என்பது ஒரு விமர்சனக் கருத்து. ஒவ்வொரு அத்தியாயத்திலும் வருகிற சம்பாஷணைகள், காந்திய நெறி விளக்கத்துக்கு அடுத்தடுத்து ஊட்டம் கொடுக்கின்றன என்பதை அந்த விமர்சனக்காரர் உணரவில்லை. எதிர்த்தரப்பு வாதத்திற்கும் சமமான வலு கொடுத்தது கொள்கை மோதலை சீராக நடத்தியிருக்கிறார் சிதம்பர சுப்ரமண்யன். 'நாவல் என்பது பயணம் கரையில் நிற்காமல் கூடவே செல்லவேண்டும்' என்று செல்லப்பா சொன்னதற்குமேல் கடலை ஆறாகப் பாவித்தால் ஆழம் தெரியாமல் காலை விடும்போது அவஸ்தைப்பட வேண்டியதுதான், கணவனின் நரை மயிரைப் பிடுங்க முற்பட்ட இரண்டு மனைவிகள் கடைசியில் அவனை மொட்டையாக்கிய கதைபோல முடியும். கதையைச் சுருக்க முற்படுவதும் என்றார் செல்லப்பா ஆசிரியரின் உத்தேசத்துடன் ஒன்றாமல், நம் உத்தேசங்களை நுழைத்துப் பார்த்தால் வருகிற வினைதான் இது. கம்பன் கவிதைகளில் பலவற்றை டி. கே. சி. ஒதுக்கித்தள்ளி இன்னும் சிலவற்றை வேறு பலர் கழிக்க முன்வரலாம் என்று செல்லப்பா குறிப்பிட்டார். மற்ற மாநிலப் பகுதிகள் நீங்கி எஞ்சிய தமிழ்நாடு (residuary state) போல கம்பன் கதி ஆகிவிடலாம்,

'காந்திஜியால் சமுதாயம் பாதிக்கப்படவில்லை என்பதாக சென்னை மாவட்ட கலெக்டர் பத்ரிநாத் சமீபத்தில் பேசியிருக்கிறார். 'மண்ணில் தெரியுது வானம்' நாவல் அந்தக் கூற்றுக்குச் சரியான பதிலாக அமைந்திருப்பதை செல்லப்பா சுட்டிக்காட்டி, காந்திஜிக்கும் கலைக்கும் உள்ள தொடர்பை, ஜி ராமச்சந்திரனுடன் அவருடைய சம்பாஷணையிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கினார். 'சத்யத்தின் மூலமாக அழகைத் தரிசிப்பது' காந்திஜி வழி. அந்த அழகு ஆன்மீக அழகு அதுவே இலக்கியத்திலோ இசையிலோ பிரதிபலிக்கப்பட வேண்டும் 'ஒழுக்கக் குறைவை அழகாகக் காட்டுவது' என்பது, ஆஸ்கார்வைல்டின் கலையம்சம் பற்றி காந்திஜியின் மதிப்பீடு. பிராய்டைவிட, மார்க்ஸைவிட, பரந்த மனிதத்துவ நோக்கு காந்திஜிக்கு உண்டு இந்த மாற்றுவழித் தத்துவத்தை இலக்கியத்தில் ஏற்றும்போது, படைப்பு ரீதியாகக் கிடைக்கிற வெற்றி, அந்தத் தத்துவ தரிசனத்துக்கு விளக்கமாக அமையும். அந்த விளக்கம் நிறைவுபெறுகிற போதுதான் படைப்பின் வெற்றி முழுமையாகும். அத்தகைய வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்கும் முயற்சிகளாக மூன்று நாவல்களையும் தாராளமாக ஏற்கலாம்!

அ ச.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa from 19-A, Pilliar Koil St., Madras-5.
Printed By A Raj-ram for Ramalakhmi Press, 97, Big Street, Triplicane, Madras-5.